
# இறையியல் களஞ்சியம்

மலர்: 10 மார்ச் 2004 இதழ் : 19

## சிறப்பிதழ்



## இயேசு கிறிஸ்து உலகின் ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் களஞ்சியம்

## காலாண்டு வெளியீடு

## IRAI - IYAL KALANJIAM
## TAMIL THEOLOGICAL JOURNAL

மார்ச் - 2004 இதழ் - 19

இலங்கை கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி
மருதனார்மடம் - சுன்னாகம்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பாசிரியர் : அருட்தந்தை டி.ஆர்.அம்பலவாணர்
துணை ஆசிரியர்: அருட்திரு. வி. பத்மதயாளன்
ஆசிரியர் குழு : அருட்திரு.தேவநேசன்
அருட்திரு. பென்சமின் ஜெயராஜ்
அருட்திரு.ஈனோக். பூ.புனிதராஜா

நிர்வாகி : திரு.சி.பி.பவிங்
ஆலோசகர் : பேராயர் அறிவர்.எஸ்.ஜெபநேசன்
மாணவர் குழு : சகோ.எஸ்.ஜோன் புவியரசன்,
சகோ.எம். நேசன்கெனடி,
அச்சுப்பதிப்பு : யாழ் அமெரிக்கன் சிலோன் அச்சகம்
வெளியீடு : இலங்கை கிறிஸ்தவ குருத்துவக்கல்லூரி
மருதனார் மடம் சுன்னாகம்
(தனிப்பட்ட வினையோகத்துக்கு மட்டும்)

Publication: Christian Theolgical Seminary of Srilanka Maruthanarmadam - Chunnakam (For Private Circulaion only)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

01. இறைவணக்கம்

02. ஆசிரியர் பார்வையில்

03. வாழ்த்துக்கள்

04. தமிழில் முதலில் சிறுகதை எழுதியவர்.....

05. திடீர் மீட்பர்?

06. மனம்மென்னும் மேடையில்

07. மதமாற்றத்தடைச்சட்டம்

08. புதுமைகள் தரும் புதுமைச் செய்தி

09. இன்றைய சமூகத்தில் சிறார்கள்

10. மனங்கள் சுகம் பெற வேண்டும்

11. பழைய ஏற்பாட்டில் இறைவனின்

12. புலவர் மணி அமுது

13. மாணவர்பகுதி

- கருவிலே சிதைகின்ற....
- எதிர்ப்புக்களின் மத்தியில் ...
- ஒழுக்கம் விழும்பந் தரும்
- கடவுளின் தாய் உள்ளம்
- தாயும், தந்தையுமான...
- மனிதப்பண்பை ...
- பசி! பசி!!

14. செய்திமடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியர் பார்வையில்...

எமது கல்லூரி காலாண்டு இதழாகிய - "இறையியல் களஞ்சியம்" 1994 மார்ச் மாதம் முதல் முதலாக வெளியிடப்பட்டது. அன்று தொட்டு அருட் தந்தை டீ.ஆர். அம்பலவாணர் அவர்கள் இதன் பதிப்பாசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

முதல் இதழில் தரப்பட்ட வாழ்த்துச் செய்தியில் எங்கள் பேராயர் அருட் பெரும் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் "இறையியல் கல்லூரியின் முதல் வெளியீடாகிய இச்சஞ்சிகை, வரப்போகும் மலர்களுக்கெல்லாம் கட்டியங் கூறுவதாக அமையட்டும் - அவனியிலே பவனிவரவிருக்கும் "இறையியல் களஞ்சியம்" யாழ்ப்பாணக் கிறிஸ்துவ சமூதாயத்திற்கு ஒரு கலங்கரை விளக்கமாகவும், கல்லூரி மாணவர்களுக்கு அரிய மேடையாகவும் - நிர்வாகத்தினருக்கு பெருமை சேர்க்கும் முத்தாகவும் விளங்க வேண்டுமென வாழ்த்தினார்.

எமது ஆதீனத்தின் இரண்டாவது பேராயர் அருட்பெரும் கலாநிதி டி.ஜே. அம்பலவாணர் அவர்கள் - "இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி தன் வளர்ச்சியில் இன்றுமொரு படியாக தன் முதல் கஞ்சிகையாக இறையியல் களஞ்சியத்தை" வெளியிட்டுள்ளதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன். துன்பங்கள், குழப்பங்கள், வேதனைகள், கொந்தளிப்புக்கள் மத்தியில் தத்தளிக்கும் எம்மக்களுடன் தொடர்பு கொண்டு இறைச் செய்தியை வழங்குவதே இறையியலின் நோக்கமாகும். இந் நோக்கத்தைப் படைக்குந் திறனுடனும், கற்பனை வளத்துடனும் செயற்படுத்தவும் - எம் தாய் மொழியாம் தமிழிலேயே நம்

மக்களின் பணிபாட்டுச் சூழலுக்கிசைந்த முறையில் நிறை வேற்ற இவ்வெளியீடு ஒரு தகுந்த கருவியாகப் பயன்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், நம் இளம் இறையியலாளர் தம் தனிப்பட்ட ஆய்வுகள், சூழ்நிலை சார்ந்த ஆழமான சிந்தனைக்ளுக்கூடாக இறையியலை தமிழ் மொழி வழியாக வளர்க்க இச் சஞ்சிகை ஒரு சிறந்த துணைக் கருவியாகச் செயல்படும் என்ற நம்பிக்கையுடன் உளமார வாழ்த்துகின்றேன் என வாழ்த்தினார்.

எமது இறையியல் கல்லூரி தொடங்கி பத்தாம் ஆண்டு நிறைவுற்ற போது 'இறையியல் களஞ்சியம்' 1994 மார்ச்ச மாதம் வெளியிடப்பட்டது. இப்பொழுது இச்சஞ்சிகை தனது பத்தாம் அகவையை நிறைவுற்றுள்ளது. எதிர் வரும் புதிய ஆண்டில், இறையியல் மாணவர்களுக்கு மட்டுமல், திருச்சபை சார்ந்த மக்களுக்கும் சிந்தனைக்குரிய புதிய அம்சங்களைத் தொடங்க எமது ஆலோசனைக் குழு தீர்மானித்துள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கிறோம்.

உங்கள் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை எழுதுங்கள் - உங்கள் ஆதரவுகள், இறைவேண்டல்களும் எங்களுக்கு உந்து சக்தியாய் அமையும். வணக்கம்.

**இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி இருபதாம் ஆண்டு நிறைவு**

நமது இறையியல் கல்லூரி 1983ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ம் திகதி மருதனார்மடத்தில் நமது முன்னாள் போரயர் அருட்பெரும் கலாநிதி டி.ஜே. அம்பலவாணர் அவர்களால் தொடங்கப்பட்டது. அருள்திரு. ரி. பிரேமராஜா இதன் முதற் பதிவாளராகவும், அருட்தந்தை டி.ஆர். அம்பலவாணர் முதல் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் நியமிக்கப்பட்டனர். தொடக்க வழிபாடு ஆசிரம வழிபாட்டு மண்டபத்தில் பேராயர் அம்பலவாணர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. 1987ல் யாழ் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. இராஜன் கதிர்காமர் கல்லூரியின் இரண்டாவது பதிவாளராக நியமிக்கப்பட்டார். 1991ல் வண.ரி.எஸ்.பிரேமராஜா கல்லூரியின் முதல்வராக நியமிக்கப்பபட்டார். இவர் ஓரண்டு பணியாற்றிய பின் உடுவில் தென்னிந்திய திருச்சபையிக்கு மாற்றப்பட்டதால் - 1992ல் அருட்கலாநிதி டி. எஸ். தியாகராஜா அவர்கள் கல்லூரியின் முதல்வராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிக்கப்பட்டார். யாழ் மக்களின் இடம் பெயர்விற்குப் பின் 1997ம் ஆண்டு தொடக்கம் பேராயர் அருட்பெரும் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் இக்கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றி வருகிறார்.

கடந்த இருபது ஆண்டுகளாக இக்கல்லூரியின் வளர்ச்சி பற்றி விரிவான கட்டுரை விரைவில் வெளிவரும். தொடக்க ஆண்டு துவக்கம் இன்று வரை கடந்த இருபது அண்டுகளாக இக்கல்லூரியின் வளர்ச்சி பற்றி பல துறைகளில் திறமையோடு பணியாற்றிய விரிவுரையாளர்கள், பதிவாளர்கள் முதல்வர்கள், ஆகியோர்க்கும் இக்கல்லூரியை இன்று வரை வழிநடத்திய இறைவனுக்கும், எங்கள் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக, இம்மட்டும் எம்மை வழிநடத்திய இறைவன் எதிர்வரும் ஆண்டுகளிலும் - சீரழிந்து வரும் எமது சமுதாயத்தைச் சீராக்கும் நற்பணியில் உண்மையாக ஈடுபடும் திருப்பணியாளர்களை உருவாக்கும் அருட்பணியில் இக்கல்லூரி விசுவாசத்துடன் உறுதியாக ஈடுபட வேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகின்றோம்.

"Iwill not seek to know the future years,
Nor cloud today with tomorrow's fears,
I will but ask clear light from Heaven to show,
How stepby step my mission on earh should go"

என்று ஓர் இறையியல் அறிஞர் கூறும் கூற்று இன்றைய காலக் கட்டத்தில் மிகப் பொருத்தமாயுள்ளது.

எமது கல்லூரி வளர்ச்சிக்காகவும் பணிகளுக்காவும் இறைவனை இறைஞ்சுங்கள். உங்கள் ஆதரவையும், ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் தந்து உதவ வேண்டுமென அன்புடன் வேண்டுகின்றோம்.

**நாட்டின் இன்றைய நிலைமை?**

கடந்த மூன்றரை ஆண்டுகளுக்குள் மூன்று பொதுத் தேர்தல்களை நாடு எதிர்கொள்ள வேண்டிய நிற்பந்தம் ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிமோகம் பிடித்த இந்நாட்டின் தலைவர்களின் செயற்பாடேயிது. பொதுத்தேர்தலை நடத்துவது இன்றைய ஜனாதிபதியின் பொழுது போக்கு எனச் சில அரசியல் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இறைவன் இதற்குத் தகுந்த பதிலளிப்பார்.

பேரினவாத கூட்டத்தினர், சிறுபான்மையினரை மீண்டு அடிமைப்படுத்த முயல்வதும் - இதன் விளைவாக மீண்டும் போர் தொடக்கப்படும் என்று பயந்து கொண்டிருந்த நம் மக்களுக்கு - கடந்த சில நாட்களாக ஜனாபதியின் கட்சியும், பிரதமரின் கட்சியினரும் தமது தேர்தல் பிரச்சாரத்தை ஆச்சரியப்படத்தக்க முறையில் நடத்தி வருவதைக்காண்கிறோம்.

நாட்டின் தென்பகுதி அரசியல் ஆச்சரியப்படத்தக்க புதிய பரிணாமத்தை மாற்றத்தை - நோக்கித் திரும்பியிருக்கின்றது. - தமிழினத்தைப் பொறுத்தவரை இது ஆச்சரியத்தைத் தந்துளது எனலாம். - எல்லாம் வல்ல இறைவனை நோக்கி நாம் ஒருமனப்பட்டு இடைவிடாமல் நாட்டின் நலனுக்காக ஏறெடுக்கும் ஜெபங்களின் விளைவேயிது - என்பதே நம் நம்பிக்கை - ஈழத் தமிழரின் ஐக்கியமும் அவர்களின் வலுவுமே இந்த நல்ல மனமாற்றத்திற்குக் காரணம் எனத் தமிழ்த் தலைவர்கள் கருதுகின்றனர். இறைவனால் ஆகாதது ஒன்றுமேயில்லை.

**சிலுவைத் தியான நோன்பு நாட்கள்**

லெந்தெனும் தவக்காலம் தொடங்கி விட்டது. இந் நாட்களில் நாம் இயேசுபிரானின் திருப்பணிகளைப் பற்றியும் - சிலுவை மரணத்தின் மூலம் அவர் சாதித்த மாபெரும் மீட்பைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்கியுள்ளோம். சிலுவை என்பது - "தம் ஒரே மைந்தன் மேல் நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு - அந்த மகனை அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார் - இந்தத் தெய்வீக அன்பே சிலுவை. இந்த ன்பே எம் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைமக்கள் கிறிஸ்துவுடைய அன்பின் அகலம் - நீளம் - உயரம் - ஆழம் என்னவென்று உணர்ந்து - அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெறுவேண்டும். இதன் வழியாகவே இரட்சிப்பின் முழு நிறைவையும் நாம் பெற்றுக் கொள்ளலாம்.

இத்தியான நாட்களில் புதிய ஏற்பாட்டில் நமக்கு முன் வைக்கப்படும் அன்பின் உயரத்துடன் நாம் விசுவாசமும் வாழ்க்கையும் எத்துனை அற்பமானது ஆழமற்றது என்பது விளங்கும். இந்த நோன்பு நாட்களில் எமக்காகத் தம்மையே ஈந்த ஆழமான அன்பின் கருத்தை அறிய வேண்டும். தூய ஆவியாரின் துணை கொண்டு தியானத்தின் வழியாக இதனை அனுபவத்தில் காண முடியும். நம்மை முற்றாக சிலுவை நாதருக்கு ஒப்புக் கொடுத்து அதன் வழியாக அவரது அன்பு செயற்படுகின்ற மக்களாகி ஆவலுடன் அதை நாடி நிற்போருக்கு வழங்குவதேயாகும்.

இறையியல் களஞ்சியத்தின் பத்தாவது அகவையின் நிறைவைக் கொண்டாடும் முகமாக நாம் வெளியிடும் இச் சிறப்பிதழிற்கு வாழ்த்துரைகளும், கட்டுரைகள், கவிதைகள் எழுதிய அன்பவர்களுக்கும் - அயராமல் தளராமல் இவ்விதழை அச்சகத் திலிருந்து வெளிவர உதவிய எங்கள் துணை ஆசிரியர் வண. வி. பத்மதயாளன் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

நன்றி

அருட்தந்தை டி. ஆர். அம்பலவாணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேராயர் வாழ்த்துரை

இறையியல் களஞ்சியம் தனது பத்து ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்வதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். இது நமது கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் விஷயமாகும். கடந்த 10 ஆண்டு காலப் பகுதி இலங்கைத் தமிழர் வரலாற்றிலே மிக நெருக்கடியான கால கட்டமாகும். இக்காலத்தில் இறையியல் களஞ்சியம் தடங்கல் எதுவுமின்றி வெளிவந்து கொண்டிருந்தது. நமது இறையியல் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் தமது ஆக்கங்களை உருவாக்கவும், பொது மக்களின் பரிசீலனைக்கு விடவும் இறையியல் களஞ்சியம் ஒரு சிறந்த தளமாக அமைந்தது. அதுமட்டுமன்றி இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று நாம் உயிர்த்துடிப்புடன் இயங்குகின்றோம் என்பதனைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

இந்த பத்திரிகையைத் தொடர்ந்து நடாத்துவதற்கு இதன் ஆசிரியர் வண.டி.ஆர் அம்பலவாணர் அரும்பாடுபட்டார். அவருடைய எழுத்தார்வமும், தமிழ் ஆர்வமுமே இப்பத்திரிகையின் வெற்றிக்குக் காரணமாகும். நமது இறையியல் கல்லூரியின் பதில் அதிபர் திரு.சி.பி.பவிங் அவர்கள் இதற்குப் பூரண ஆதரவு வழங்கினார். ஓர் இறையியல் கல்லூரியின் சஞ்சிகை குறிப்பாக யுத்தச் சூழலில் இயங்குகின்ற இறையியல் சஞ்சிகை, வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது. இப்பத்திரிகைக்கு எழுதுகின்ற விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்கும் நான் இதனையே கூற விரும்புகின்றேன்.

இவர்கள் எழுதுகின்ற பொழுது வேதாகம வசனங்களைத் தியானித்து தமது சூழலை மையப்படுத்தி எழுத வேண்டும் "சிறு துளி பெருவெள்ளம்" இப்படியாக நாம் எழுதத் தொடங்கினால் ஆசிய இறையியலில் வளர்ச்சிக்கு நாம் ஒரு முக்கியமான பங்கினை அளித்தவர்களாவோம். இறையியல் களஞ்சியம் தொடர்ந்து வெளிவர வண.டி.ஆர்.அம்பலவாணர் அவர்களுக்கு இறைவன் ஆரோக்கியத்தையும், நல்லாசியையும் வழங்குவாராக,

**எஸ். ஜெபநேசன்**
**பேராயர் தென்னிந்தியத் திருச்சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

மருதனார்மடம் இலங்கை கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரியின் காலாண்டு சஞ்சிகையான "இறையியல் களஞ்சியத்தின்" பத்தாவது ஆண்டின் நிறைவையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ் மண்ணில் இறையியல் உருவாக்கத்தில் ஈடுபட்ட, ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆசிரியர் குழாம், மற்றும் படைப்பாளர்கள் அனைவரையும் பாராட்டலுடன் வாழ்த்துகின்றேன். எனது கல்லூரி வாழ்வின் மாணவக் கிறிஸ்தவ இயக்கத்தின் ஆசானும், "இறையியல் களஞ்சியத்தின்" அடித்தளமும், ஆலோசகருமான பேராசான் பேராயர் சு.ஜெபநேசன் அவர்களின் தனித்துவமான, ஆழமான கட்டுரைகளுடன் வெளிவரும் இறையியல் களஞ்சியம் தனக்கே உரித்தான இறையியல் சிந்தனைகளைக் கொண்டுள்ளது.

யாழ் மண்ணில் இறையியல் மூச்சாக வெளிவருவது மட்டுமல்ல இந்தக் காலத்தின் உணர்ச்சிமயமான ஆன்மீகப் போக்கை மீள சிந்தித்துப் பார்த்து, ஆழமான ஆன்மீகத்தைப் பற்றிக் கொள்ள அழைப்பு விடுகிறது.

இறையியல் விரிவுரையாளர்களின் எண்ணக் கருக்கள் மட்டுமன்றி இறையியல் மாணவர்களின் இறையியல் கருத்துக்கள், கவிதைகள், நடைமுறை வாழ்வின் இறை தேடல்கள் என்பன உட்பட பல அம்சங்களில் இறையியல் களஞ்சியம் தன் திறமையை வெளிப்படுத்தி உள்ளது.

"இறையியல் களஞ்சியம்" அதன் ஆசிரியர் குழாம், அதனைச் சார்ந்த இறையியல் கல்லூரி வாழ்க, வளர்க என வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன்.

**வண. செ. பி. நேசகுமார்,**
**யாழ் குரு முதல்வர்,**
**இலங்கைத் திருச்சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

ஒரு சதாப்தத்தை முடித்து புதிய சதாப்தத்திற்குள் பயணமாகும், இறையியல் கல்லூரியின் வெளியீ டான இறையியல் களஞ்சியம் பல ஆக்கங்களை வாசகர் சமூகத்திற்கு நற்பயனாக தருமா போது நிலையி லிருந்து இலக்கியம் சமூக சமய விடயங்களை மையமாகக் கொண்டு பல்வேறுபட்ட ஆக்கங்களை சமூகத்திற்கு எடுத்துச் சென்றது. குறிப்பாக பேராயர் அறிவர் எஸ். ஜெபநேசன் அவர்களின் ஆக்கங்கள் தோண்டி எடுக்கப்பட்ட பொக்கிசங்களாக வெளிவருவது ஒரு சிறப்பு அம்சம் ஆகும். அவரது எழுத்து துறையினையும், அவரையும் கடவுள் ஆசீர்வதிக்க வேண்டுமென ஆசிக்கிறேன்.

பதிப்பாசிரியர் குழு ஆரம்பத்தில் இருந்த இறையியல் களஞ்சியத்தை விட புதிய கவர்ச்சியுடன் ஆக்கங்களை நெறிப்படுத்தி ஆய்வு செய்து வெளியிட்டு வருவது சமூகத்திற்கு இறையியல் களஞ்சியம் ஒரு பிரதான வெளியீடாக, உயர்தரத்தை எட்ட வேண்டுமென்ற உணர்ச்சிகளை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

மேலும் இவ் இறையியல் கல்லூரியின் பணிகளும், அவர்கள் வெளியீடான இறையியல் களஞ்சியமும் மென் மேலும் வளர்ந்து ஒரு பனைமரமாக பல்லாண்டு காலம் பயன்பெற உளமார வாழ்த்துகின்றேன்.

**அருட்திரு. க. கருணசேகர - முகாமைக்குரு**
**மெதடிஸ்த திரு அவை யாழ் சேகரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

மருதனார்மடத்தில் கடந்த இருபது ஆண்டுகளாக இயங்கி வரும் இலங்கை கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரியின் வெளியீடான இறையியல் களஞ்சியம் தனது பத்தாவது ஆண்டை நிறைவுற் றதை ஒட்டி வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். "இயேசு கிறிஸ்து உலகின் ஒளி" - "சிலுவை ஓர் புனிதச் சின்னம்" எனும் மகுட வாசகங்களைத் தத்துவமாகக் கொண்ட ஆன்மீக நெறியில் நம்பிக்கை வரட்சியோடு வாழும் இன்றைய எமது தலை முறைக்கு அறியாமை போக்கி ஆன்மீக ஒளியை உள்ளத்தில் ஏற்றும் நோக்குடன் "இறையியல் களஞ்சியம்" ஒரு "Tamil Theological Journal" ஆக வெளிவருவது பாராட்டிற்குரியது.

எழுத்தாக்கத்திறன் அருகிவரும் இன்றைய காலச் சூழலில் எமது சந்ததியினரிடையே எழுத்தாக்கத்திறனை வளர்க்க வேண்டும் என்ற முனைப்போடு குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்களும், குருத்துவ மாணவர்களும் இம்முயற்சியில் இணைந்து ஈடுபடுவது போற்றுதற் குரியதா கும். இத்தகைய படைப்பு முயற்சி ஒரு கால வரலாற்றின் பதிவாகக் கூடத் திகழும்.

இறையியற் களஞ்சியத்தில் இடம்பெறும் ஆக்கங்கள் மார்க்க நெறிகளில், இறையியல் சார்பாக இடம் பெறும் முரண் நிலைகளைத் தெளிவுபடுத்துவதோடு ஊக்க மிகுதியையேற்படுத்தி ஒரு தேடல் அவாவை உருவாக்க வேண்டும் என்பது என் எண்ண வெளிப்பாடாகும். அறிவுத் துணை யோடு மெய்ப்பொருளைக் காணும் நிலைக்கு வளர்த்து செல்ல வேண்டியது பிரதான கடப்பாடாகும். "எப்பொருள் யார் யார் வாய்க்கேட் பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

இத்தகைய நெறிமுறைகளைக் கடைக் கொண்டு "இறையியல் களஞ்சியம்" வெளிவர வாழ்த்துவதோடு, இச்சஞ்சிகை வெளியீட்டிற்கு காலாக அமைந்த அனைவரையும் பாராட்டுகின்றேன். சிறப்பாக குருத்துவக் கல்லூரி முதல்வரான பேராயர் அறிவர் எஸ். ஜெபநேசன் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. பேராயர் அவர்களின் விடா ஊக்க முயற்சி, கல்வியாளரை மதித்து மேலும் தட்டி வளர்க்கும் பண்பு, ஆன்மீக சமூக இயைபாக்கலில் வைத்துள்ள தூர நோக்கு - யாவற்றையும் விஞ்சியமானிட நேயப் பண்பு இத்தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட தலைவனால் வழிநடாத்தப்படும். இலங்கை கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி சஞ்சிகை வெளியீட்டோடு மட்டுமன்றி சமூக வழிப்படுத்தலில் மேலும் பல சாதனைகள் புரிய வேண்டுமென்று உளமார வாழ்த்துகின்றேன்.

**நோயல். அ. விமலேந்திரன்,**
**முதல்வர்,**
**யாழ்ப்பாணக் கல்லூரி,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

சுன்னாகம் மருதனார்மடத்தில் அமைந்துள்ள இலங்கைக் கிறிஸ்தவ இறையியற் கல்லூரி வெளியிடும் இறையியல் களஞ்சியம் எனும் காலாண்டு இதழ் பத்தாவது நிறைவைக் கொண்டாடுவது அளவில்லா ஆனந்தத்தை அளிக்கின்றது.

இலங்கையிலே ஒரு இதழ் பத்து ஆண்டுகள் தொடர்ந்து வெளிவருவது என்பது மிகப்பெரிய சாதனையாகும். சிற்றேடுகள், சஞ்சிகைகள் மக்களுக்கு மிகுந்த பயனளிப்பவை, சமயம் இலக்கியம் பொதுவிடயங்கள் எனப் பல்வகைப்பட்ட செய்திகளைத்தாங்கி வெளிவரும் இறையியல் களஞ்சியம் நீண்டகாலம் நின்று நிலைக்கவேண்டுமென ஆண்டவனை வேண்டுகின்றேன்.

இந்த இதழிலே அறிஞர் பெருமக்களின் ஆக்கங்கள் பல இடம்பெறுவது அதன் தரத்தையும் சிறப்பையும் அதிகரிக்கச் செய்கின்றது. சிறப்பாகக் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு இறையியல் ஆற்றும் பணி விதந்து பாராட்டப்பட வேண்டியது. வாசிப்புப்பழக்கம் அருகிவரும் இக்காலத்திலே இத்தகைய இதழ்கள் வாசிப்புப்பழக்கத்தினை அதிகரிக்கச் செய்யும் சக்திவாய்ந்தவை என்பதை எல்லோரும் அறிவர்.

அழகான ஓவியங்களுடனும் அருமையான அட்டைப்படத்துடனும் சிறப்பான அச்சமைப்பில் இறையியல் களஞ்சியம் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இதன் பதிப்பாசிரியர் அருட்தந்தை டி.ஆர்.அம்பலவாணர். தமிழ்மொழி இலக்கணங்களிலும் ஆங்கிலத்திலும் நல்ல புலமைத்துவம் உடையவர். அத்துடன் இதழியல்துறையில் ஆற்றலும் அனுபவமும் நிரம்பியவர். இவரது ஆக்கங்கள் மிகவும் சிறப்பானவை.

ஈழத்து இதழியல் வரலாற்றிலே தனக்கெனத் தனித்துவமான இடத்தைப்பெறும் இறையியல்களஞ்சியம் காலம் கடந்தும் நிலைக்கும் சக்தி வாய்ந்து. இவ்விதழின் வருகைக்காக அவராது உழைக்கும் பதிப்பாசிரியரையும் அவரோடு தோளோடுதோள் கொடுத்துப்பணியாற்றும் ஆசிரியர், மற்றும் துணையாசிரியர்களையும் மனமார நேசிக்கின்றேன்.

இறையியல் களஞ்சியம் பத்தாவது அகவையை நிறைவு செய்யும் இந்நாளிலே அதை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். எல்லா வகையிலும் இறையியல்களஞ்சியம் வெற்றி நடைபோட எல்லாம்வல்ல இறைவன் ஆசிர்வதிப்பார், என்று நம்புகின்றேன். இறையியல் களஞ்சியத்தின் பணிகள் தொடர வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி (செல்வி) C.V செல்லையா - அதிபர்,**
**உடுவில் மகளிர் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

அரிய முயற்சியால் தேடப்பெற்ற நல்ல விளைவின் நிறைவிடமே களஞ்சியமாகும். இதற்கமைய இறையியலில் உன்னதமான ஒரு தேடலால் உந்தப் பெற்ற பல கருமவீரர்களதும், காருண்ணிய சீலர்களதும் இறையியலின் தேடல்கள் பற்றிய புனிதமான ஒரு மலர்தான் இறையியல் களஞ்சியமாகும்.

இறையியல் என்பது ஆண்டவனுக்கும் - சீவனுக்கும் - உலகுக்கும் உள்ள இணைப்பைப் பற்றிய அறிவாகும் அவ் அறிவுகளால் பெற்ற அனுபவங்களைச், சாட்சிகளை, உலகம் வாழும் வண்ணம் வாழ்வாங்கு வாழ ஆற்றுப்படுத்த வேண்டியது ஆன்றோர், பெரியோர், உத்தமர் போன்றோரது கடமையாகும்.

இந்தவகையில் இவ் இறையியல் களஞ்சிய மலர்ப் பதிப்பாசிரியர் அருட்தந்தை டி.ஆர். அம்பலவாணர் அவர்களும் அவர்தம் மலர்க் குழுவினரும் பாராட்டுதற்கும் போற்றுவதற்கும் உரியவர்களாவர்கள்.

செல்வங்களுள் சிறந்த செல்வம் செவிச்செல்வம் என்பர் முன்னோர். அச்செவிச் செல்வங்களுள்ளும் உயர்ந்த செல்வம் அருட்செல்வமாகும் அதாவது ஆண்டவரின் அருளை, அவர் புகழை, அவர் வாழ்ந்த பாதையை, எமக்காக அவர் சுமந்த சுமைகளை எம் செவியாரக் கேட்டு, உளமார நினைந்து, வாயார வாழ்த்துவதே மேலான இன்பமாகும்.

இத்தகு அருட்செல்வத்தை அள்ளி வழங்கும் இறையியல் களஞ்சியம் தன்னகத்தே பழமை பேணிச் செழுமை தேடல், இன்சொல் பேசி இன்பங்காணல், அறவழி நின்று நீதி போற்றல், அன்புவழி நடந்து அரவணைத்து வாழல், சமத்துவம் பேசிச் சாந்திப்படுத்தல், மானிடத்துவம் வாழ வழியது கூறல், இரக்கம் காட்டி இன்முகம் செய்தல், நிகழ்காலச் சமுதாயத்தின் நிதர்சனங்களைக் காட்டல், ஒப்புநோக்கி உண்மை கூறல், தன்பிரதேசத்துத் தனித்துவம் உணர்த்தல், செய்ந்நன்றி மறவாச் சிந்தையினராதல் போன்ற பல சீரிய பண்புகளைக் களஞ்சியத்தில் கொண்டு மிளிர்கின்றது.

மருதனார்மடத்திலுள்ள இலங்கை கிறிஸ்தவ குருத்துவக்கல்லூரி இரு தசாப்தங்களுக்கு மேலாக ஆற்றிவரும் பல் பணிகளுள் ஓர் உயரிய பணியே இன்று பத்தாண்டுகள் நிறைவுபெற்றுப் பொலிவுடன் நிற்கும் இவ் இறையியல் களஞ்சியமாகும்.

பத்து ஆண்டு நிறைவு போல் என்றும் பாரில் நிறை களஞ்சியமாய் இறையியல் போற்றிட வாஞ்சையுடன் வாழ்த்தித் துதிக்கின்றோம்.

எஸ். தனபாலன்,
அதிபர். சென் ஜோன்ஸ் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# CONGRATULATIONS

*I am very happy to give a message at the occasion of our C.T.S. magazine Iraiiyal Kalanjiam completing ten years of publi cat-ion. This magazine is important not only because it makes public the kind of theologising which takes place in the Seminary, but also because it plays a role in the theological education and training of christian lay people. Not only does it give an account of the work in the Seminary, but it also plays a role in equipping the church for mission.*

*Publishing a magazine over an extended period of time is not an easy thing. Articles must be plucked from the hands of busy writers, printers must be made to meet deadlines, etc... To do this in addition to one's own full - time Job is a real burden. We therefore once again want to express our gratitude to Rev. D.R.Ambalavanar, who has edited this magazine since its inception.*

*May this magazine not only continue but flourish and find a growing number of subscribers in the coming yesrs, so that it may fulfill its purpose even more than it is already doing today.*

***C.T.S. Bavinvk, Deputy principal***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் முதலில் சிறுகதை எழுதியவர் ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளையா?

*~பேராயர் எஸ். ஜெபநேசன்~*

தமிழிலே சிறுகதை தோன்றியது எப்போது என்பது இலக்கியவாதிகளிடையே இன்றும் முடியாத சண்டையாகும். சிறுகதை என்பது தமிழுக்கு புதியதல்ல அது தமிழில் சங்ககாலம் தொட்டே இருந்து வருகின்ற என்றும் சிறுகதை என்ற பெயர் மட்டுமே இக்காலத்திலே எழுந்தது என்றும் சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தற்காலத்தின் நடைமுறையில் வழங்கும் சிறுகதை நவீன இலக்கிய வடிவம் என்றும் இக்கலையுரு இருபதாம் நூற்றாண்டின் உற்பத்தியேயாகும் என்றும் வேறு சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மாதவஐயர், வ. வே. சு. ஐயர், சுப்பிரமணியபாரதி முதலியோர் மேனாட்டுப் பாணியிலே சிறுகதைகள் எழுதினார்கள். இவர்களின் கதைகள் பெரும்பாலும் சமூகச் சீர்கேடுகளையும் பழக்கவழக்கங்களையும் சித்திரிப்பவனாக அமைந்தன. எனவே 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேதான் தமிழிற் சிறுகதை இலக்கியம் தோன்றியது என்று நம்பப்படுகின்றது. வி.வே.சு.ஐயரின் "மங்கையர்கரசியின் காதல் முதலிய கதைகள்" என்ற தொகுப்பு, பிற்கால எகுத்தாளர் களுக்கு வழிகாட்டியாக அமைந்தது என்று கொள்ளப்படுகின்றது.

ஆனால் 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் வாழ்ந்த ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளை 'நன்னெறிக் கதாசங்கிரகம்' என்றவொரு சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டார். இந்த நூலினுடைய முதலாவது பதிப்பு கி.பி. 1869ஆம் ஆண்டு வெளிவந்தது. அப்பொழுது அமெரிக்கன் மிஷன் அச்சகம் Strong and Asbury என்ற தனியார்நிறுவனத்திடம் இருந்தது. Strong and Asbury தாபனத்தார் முதலாவது பதிப்பினை வெளியிட்டனர். இதனுடைய இரண்டாவது பதிப்பு 1893ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அப்பொழுது அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகத்தை மீண்டும், தனது பொறுப்பில் ஏற்றுக் கொண்டது. இரண்டாவது பதிப்பின் பிரதி ஒன்று இப்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டனில் உள்ள பிரிட்டிஷ நூலகத்தில் இருக்கின்றது. இதனைச் சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் கண்டேன். 1/8 அளவினதாய் 324 பக்கங்களைக் கொண்டதாக நன்னெறி கதாசங்கிரகத்தின் இரண்டாம் பதிப்பு விளங்குகின்றது. இதன் எழுத்துக்கள் 8 புள்ளி அளவினதாய் இருக்கின்றன. ஒவ்வொரு கதையும் ஏறறத்தாள 8 பக்கங்களைக் கொண்டதாக விள்ங்குகின்றது. இதன் ஆசிரியர், ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை 1820 ஆம் ஆண்டு நவாலியில் பிறந்தவர். உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, டிறிபேக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் தமிழ் கற்பித்தவர். உதயதாரகைப் பத்திரிகைக்கு ஏறத்தாள 40 வருடங்கள் ஆசிரியராயக இருந்தவர். இலக்கியவரலாறு, சரித்திரம், கவிதை வானசாஸ்திரம், முதலிய வற்றில் அரிய நூல்களை எழுதியவர். இவருடைய மிகச்சிறந்த நூல் "பாவலர் சரித்திர தீபகம்" 1895 ஆம். ஆண்டு ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை இவ்வுலக வாழ்வை நீத்தார்.

நன்னெறி கதாசங்கிரகத்தின் முதலாவது பதிப்பின் முன்னுரையில் (பாயிரம்) இக்கதைகள் எழுதப்பட்டதன் நோக்கத்தை ஆசிரியர் விளக்கிக் கூறுகின்றார். "தமிழில் இதுவரை காலமும் எழுதப்பட்டும், வாசிக்கப்பட்டும் இருக்கின்ற கதைகள் சாதாரணமாய் சிற்றின்ப துராசைகளை எழுப்பி வாலிபர் மனங்களைக் கறைபடுத்தும் காமரசம் வாய்ந்தவையன்றி, ஞானரசம் சார்ந்தவையல்ல." "கதைகளில் ஆயத்தமானவற்றில் சிலவற்றை நன்னெறிகதாமாலை என்ற முகவுரையுடன் உதயதாரகைப் பத்திரிகையில் தோற்றச் செய்து மறுபடி பக்தி போதனைக்குரிய வேறு சிலவற்றையும் எழுதி வந்தோம்" "இக்கதைகளை இங்கிலீசில் இருந்து மொழிபெயர்த்து வேட்டை வாளியானது புழுக்களின் உருவைக் பேதப்படுத்தினாலொப்ப எமதிஷ்டப் பிரகாரம் கூட்டிக் குறைத்துப் பேதப்படுத்தி வேற்றுருவாக்கி கொண்டோம். எம் ஊர்ப்பெண்கள் ஆதியாய் பழமொழிப் பிரீதியர் ஆதலா அவற்றில் சற்றும் ஒறுப்பின்றி தாராளமாச் சேர்த்துக் கொண்டோம்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பதிப்பு 1893 - இல் வெளிவந்தது. இதன் முகவுரையினால் முதலாவது பதிப்பிற்குப் பெரும் வரவேற்பு இருந்தது என்பது தெரிகின்றது. இதன் முகவுரையில் (பாயிரம்) ஆசிரியர் 'நவமான சிலகதைகளை கூட்ட யோசித்தும் புத்தகம் பெருக்கும் காலம் எடுக்கும் என்ற அச்சத்தால் அந்த எண்ணத்தை விடுத்து உள்ளவற்றையே திருத்தி, காடினிய சந்திகளை தவிர்த்து அரும்பதத் தொடர்களை மாற்றி யாவரும் விளங்க இலகுவாக்கினோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

நன்னெறி கதாசங்கிரகத்தில் 40 கதைகள் இருக்கின்றன. பிள்ளைகளுக்கான சிறுகதைகள் எழுதுகின்றபோது இங்கிலாந்தின் ஆசிரியர்கள் அந்தக் கதை குறிக்கும் படிப்பினை. பயன் முதலியவற்றையும் தெளிவாகக் கூறுவார்கள். கதையின் முடிவில் படிப்பினை (MORAL) என்று ஒரு வசனத்தைக் குறிப்பிட்டு விடுவார்கள், ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை ஒவ்வொரு கதையின் தொடக்கத்திலும் அது குறிக்கும் செம்பொருளையும், ஒவ்வொரு கதையின் முடிவிலும் அவை குறிக்கும் போதனையையும் தெளிவாகக் கூறியுள்ளார். ஆசிரியர் குறிக்கும் செம்பொருளும் போதனைகளும் வருமாறு:

1. சிதட கண்ட பீவரன் கதை
   செம்பொருள்: இணக்கம் வாழ்வு தரும்
   <u>Union is_Strength</u>
   படிப்பினை: இதனால் இணக்கம் வாழ்வு தரும் என்று உணர்க.
2. வீம்பாகரன் கதை
   செம்பொருள்: அகங்காரம் அருமை குலைக்கும்
   <u>Prioe before fall</u>
   படிப்பினை: இதனால் தத்தம் ஒழுக்கமும் தகுதியும் நீங்கி வீம்படித்து தம்மினத்தை இகழ்ந்து மேலினம் நாடி நடப்பர். (அன்னநடை நடக்கப்போய், காகம் தன் நடையும் கொட்டார் போல) உள்ள கற்கையும் சலாக்கியமும் அழிந்து போவரரென்றுணர்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மூடசிகாமணிக் கதை

செம்பொருள்: வீண் எண்ணம் சிரிப்புக்கிடம்

Selling the skin before catcting bear

படிப்பினை: இதனால் மனோரதம் ஏறி ஆகாயக்கோட்டை கட்டுவார் பாடு சிரிப்புக்கிடமாம் என்றுணர்க.

4. பேரவலம்பிரிவுக் கதை

செம்பொருள்: அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பிசாசு

As the fool thinks the bell clinks

படிப்பினை: இதனால் யோசனையும் பகுத்தறிவும் இன்றி நடப்பார்க்கு இலச்சையும் திகிலும் நேரிடும் என்றுணர்க.

5. பொன்னைந்த பெருமான் கதை

செம்பொருள்: வறுமை நிலை நில்லாது

Today to me tomorrow it belongs to you

படிப்பினை: இதனால் வறுமைநிலை நில்லாது என்றுணர்க.

6. வினையளந்த பெருமான் கதை

செம்பொருள்: பொறாமை நட்டம் விளைவிக்கும்

Shame to him who evil thinks

படிப்பினை: இதனால் அயலார் வாழப் பெறாமல் அவர் வாழ்வில் பொறாமை கொள்வார்க்கு பொருள் நட்டமொன்றோ உயிர்நட்டமும் வரும் என்று உணர்க.

7. கண்ட துண்டங் கண்ட கதை

செம்பொருள்: தீமைக்கு நன்மை செய்ய வேண்டும்

Render good for evil

படிப்பினை: தீமை செய்தார்க்கும் செய்ய நினைத்தார்க்கும் நன்மை நினைப்பதும் செய்வதுமே பதில் உபகாரம் என்று உணர்க.

8. உபய சுந்தரி கதை

செம்பொருள்: விவேகம் தீமை தடுக்கும்

Good counsel is abode all price

படிப்பினை: இதனால் விவேகம் எந்தப் பெரும் காரியங்களையும் சரிக்கட்டி நடத்தும் என்றுணர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மௌட்டிய சருமன் கதை

செம்பொருள்: பேதைக்கு இரகசியத்தை தெரிவித்தால் தீது நேரிடும்

Never put a sword in a mad mans hand

படிப்பினை: இதனால் அறிவிலார்க்கும் பொருளாசை உள்ளார்க்கும் இரகசியம் சொல்லவொண்ணாது என்றும் அப்படிச் செல்லுங்கால் அது வெளிவர எளிதென்றும் அறிக

10. மாவுத்தர் மூவர் தலையிழந்த கதை

செம்பொருள்: புத்தியற்ற துணைணிவராற் கெடுதியுறும்

Look before you leap

படிப்பினை: இதனால் எடாத எடுப்பிற் கையிட்ட அப்புத்தி பூர்வமாய் நடப்பார் நட்டம் அடைவார் என்று உணர்க.

11. எண்ணெய் சாடி பேசிய கதை

செம்பொருள்: தைரியம் சயம் அடையும்

Conduct and courage lead in honor

படிப்பினை: இதனால் தைரியமும் ஓர்மமும் விவேகமும் ஆச்சரியங்களைச் செய்யும் என்றுணர்க.

12. நவநாம சுந்தரன் கதை

The Lord May be lord an yet need his hinds help

படிப்பினை: இதனால் சிறயவராலும் பெரியவர்க்கு நயமுண்டாம் என்று உணர்க.

13. இஷ்ட நேயன் கதை

செம்பொருள்: சுயபுத்தி மோசம் தரும்

Forbid a fool thing and that he will do

படிப்பினை: இதனால் பெரியோர் புத்திக்கு செவிசாயாது தம்மதியே மதியென்று தம்புத்தியில் சார்வார்க்கு நாசம் தாரத்தன்று என்றுணர்க.

14. அடங்காத சிங்கி கதை

செம்பொருள்: துடியாய் பெண்டிதர் மடியா நெருப்பு

He has fault of a wife that marries Mams pet

படிப்பினை: இதனால் வீட்டிற்கு நல்லவளை வையாதார் முடிவு சிரிப்பிற்கு இடமாம் என்றுணர்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. மித்திர வஞ்சி கதை

செம்பொருள்: கெடுக்க நினைக்கில் அடுக்கக் கெடுறும்

As you sow so shall reap

படிப்பினை: இதனால் பிறரைக் கெடுக்கும் உபாயம் தனக்கும் கேட்டமாய் முடியும் என்றும் உணர்க.

16. நுணுக்க திரன் கதை

செம்பொருள்: அறக்கூர்மை முழு மொட்டையாம்

Too much of a thing is good for nothing

படிப்பினை: இதனால் அதிநுட்பக் கருத்து பலமுறையும் சிரிப்புக்கிடமாம் என்று உணர்க.

17. குலபூஷணன் கதை

செம்பொருள்: யாவர்க்கும் மிதமாய் நடத்தல் கூடாது

To please all is impossible

படிப்பினை: இக்கதையினாற் பிறர்க்கு அதமாய் நடப்பது எப்போழுதும் அருமையென்றும் அப்படி நடக்கும் காற் தமக்கு பெரும்பான்மையும் கேடும் நட்டமும் நேரிடும் என்றும் இத்துடன் இரு மனைவியர் வைத்திருப்பார் தம்பாடும் இவ்வாறாம் என்றுணர்க.

18. சண்டதீரன் கதை

செம்பொருள்: மூடனுக்கு உபதேசித்தல் நட்டம் வருவிக்கும்

Roprove not a scorner lest he hates thee

படிப்பினை: இதனால் சன்மார்க்க வார்த்தைகள் துன்மார்க்கர் செவியில் நுளையாதென்று மூடனுக்கு உபதேசித்தல் தீமையை பெரும்பாலும் வருவிக்கும் என்றும் உணர்க.

19. யூக பஞ்சானைன் கதை

செம்பொருள்: பிறர் பொருள் எடுப்பார் சதமடங்கு இறுப்பார்

Iii gotten goods seldom prosper

படிப்பினை: இதனால் பெரியாரை அணாப்பிப் பொருள் அபகரிப்பார் வலியாரால் தம் பொருள் இழப்பர்.

20. துஷ்ட வாருடன் கதை

செம்பொருள்: துஷ்ட்ட சங்கம் துயர் தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Evil communication corrupt good manners

படிப்பினை: இதனால் துன்மார்க்கருடன் கூடிய சன்மார்க்கருக்கும் ஆபத்து நேரிடும் என்று உணர்க.

21. நிர்மன ரம்மியன் கதை

செம்பொருள்: பெருவாஞ்சை கிலேசம் தரும் எனல்

Covetousness brings nothing home

படிப்பினை: இதனால் போதும் என்ற எண்ணம் இன்றி பெருவாஞ்சை கொள்வார்க்கு நாசம் படலைக்கு சமீபம் என்று உணர்க.

22. தோசை கனவானிட கதை

செம்பொருள்: போதனையிலும் முன்மாதிரி உறைக்கும்

It is better to do well than to say well

படிப்பினை: இதனால் போதனையிலும் செயலே முக்கியம் என்று உணர்க.

23. நிரம்பா நெஞ்சன் கதை

செம்பொருள்: ஆசை அலைச்சல் தரும்

A covetous man is ever in want

படிப்பினை: இதனால் பேராசை, உள்ள பொருளுக்கும் அனர்த்தம் தேடும் என்று உணர்க.

24. படுலோப துங்கன் கதை

செம்பொருள்: லோபி சின்னத்தனம் அடைவான்

Pennywise pound foolish

படிப்பினை: இதனால் மரியாதை இன்றி பெருவாஞ்சை மிகுதியால் குணங்கொண்டு நடப்பார் சின்னத்தனம் அடைவார் என்று உணர்க.

25. வைராக்கிய பெட்பன் கதை

செம்பொருள்: சத்துருவை நம்பலாகாது

Trust not a new friend nor an old enemy

படிப்பினை: இதனால் மாற்றானுக்கு இடம் கொடுக்கும் பெயர்கள் அற்றார் துயரம் அடைவார் என்று உணர்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. இரு பிரிவுகள் கதை

செம்பொருள்: ஆய்ந்தோய்ந்து பாராதார்க்கு ஆபத்து வரும்

Judge nothing at first sight

படிப்பினை: இதனால் தீர்ப்பது தீவினைக்கு இடம் கோலும் என்று உணர்க.

27. இடங்கண்ட மிண்டன் கதை

செம்பொருள்: கிடைத்தற்கு மேற்பட வாஞ்சித்தல் நஷ்டம்

Covet nothing over much

படிப்பினை: இதனால் இல்லாப் பொருளுக்கு ஆசைப்பட்டால் இருந்த பொருளையும் இழக்க வரும் என்று உணர்க.

28. கடனிநாக்கண்டன் கதை

செம்பொருள்: மெய் பொய் போல் ஆகும், பொய் மெய் போல் ஆகும்.

Aspaee good tale ill told is marred in the telling

படிப்பினை: இதனாற் சம்பிரதாயத்திரனாலும் வாக்கு சாமத்தியத் தினாலும் மெய் பொய் ஆகும். பொய் மெய் ஆகும் என்றுணர்க.

29. சதுமூடர் கதை:

செம்பொருள்: அறிவீனம் சிரிப்புக்கிடம்

Ignorance is the parent of many injuries

படிப்பினை: இக்கதைகளால் மூடன் காரியம் எப்போழுதும் நகைப்புக்கிடமாம் என்றுணர்க.

30. பஞ்சதந்திரிகள் கதை

செம்பொருள்: தந்திரிகள் தண்டனை பெறுவார்கள்.

Crafty has never any peace

படிப்பினை: இது தந்திரம் செய்து உலகத்தை வருத்தும் பெயர்கள். தகுதியான காலத்தில் ஏற்ற தண்டனை பெறுவார்கள் என்று உணர்க.

31. திரியா வரப் புரசி கதை

செம்பொருள்: துடுக்கலுக்கு அன்பு வார்த்தைகள் பயன்படா

It is hard to break a hog and ill custom

படிப்பினை: அதனால் கரும்பை உரவில் இட்டு துவைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழிந்தாலன்றி சாறுவராமை போல துட்டருக்கு ஊறு காட்டினாலன்றி நற்புத்தி தோற்றாது என்று உணர்க.

32. பிரதி கிருத்திய கதை

செம்பொருள்: அளந்த அளவால் அளக்கப்படும்

Gather this tpes expect prickles

படிப்பினை: இதனால் ஒவ்வொருவனும் தான் தான் விதைத்ததையே அறுக்கவரும் என்றும் அளந்த அளவாலே அளக்கப் பெறுவான் என்றும் உணர்க.

33. விடாத மின்டன் கதை

செம்பொருள்: முயற்சி அனுகூலம் தரும்

Depend more on your own exertions than fortune

படிப்பினை: இதனால் முயற்சி அனுகூலிக்கும் என்றும் பிரயாசம் சித்தி தரும் என்றும் உணர்க.

34. புண்ணிய கோபன் கதை

செம்பொருள்: சொல்லிலும் செய்கைபயன் தரும்

Example teaches better than precept

படிப்பினை: இதனால் துட்டருக்கு சீவனேசம் இல்லை யென்றும் சொல் உபசாரத்தில் பிரயோசனம் இல்லை யென்றும் உணர்க.

35. அனு சந்தான புரவி

செம்பொருள்: யோசனை இன்றி யாவர் பேச்சையும் நம்புதல் தீது

Trust him no further than you can see him

படிப்பினை: இதனால் எந்தக் கருமத்தையேனும் ஆராயாமலும் யோசனை செய்யாமலும் பேசுவதும், அப்படி பேசுவாரோடும் செய்வாரோடும் எடுபட்டு நடப்பதும் ஈற்றில் மோசத்தையே விளைவிக்கும் என்று உணர்க.

36. அதர்ம தேட்டன் கதை

செம்பொருள்: அறியாய சம்பாத்தியம் நிலை நில்லாது

To naught it goes that came from naught

படிப்பினை: இதனால் முறைகேடாய் சம்பாத்தியம் பண்ணல் ஆகாதென்றும் அப்படி பண்ணும் காற் கூத்தாட்டு சபைபோல விடியுமுன் அவை குனியமரம் என்றும் உணர்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. தனுசராரா்வன் கதை

செம்பொருள்: பிள்ளைகளின் நன்றியீனம்

My son is my son till he has got him a wife

படிப்பினை: இதனால் பிள்ளைகள் செய்நன்றி துரோகிகளாய் பெற்றோரை அன்பின்றி நடத்துவார்கள் என்று உணர்க.

38. இலஞ்ச பூபதி கதை

செம்பொருள்: வழக்காடல் இருகட்சியாருக்கும் நஷ்டம்

Agree for the law is cost

படிப்பினை: இதனால் பரிதானம் நியாத்தை புரட்டும் என்றும் வழக்கு நட்டம் வகுலிக்கும் என்று உணர்க.

39. சத்திய மான்மியன் கதை

செம்பொருள்: பொய்மை கனமுடையது

Honesty is the best policy

படிப்பினை: இதனால் பொய் நட்டம் வகுலிக்கும் என்றுணர்க.

40. புத்திர சிகாமணி கதை

செம்பொருள்: இல்லறம் அறங்களைக் கொண்டது.

Married is honourable but house keeping is a shrew

படிப்பினை: இதனால் நல்விவாகம் கனம் தரும் என்றுணர்க.

இவ்வாறு ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை அவர்கள் தாம் எழுதிய நாற்பது கதைகளும் ஒவ்வொரு பாடத்தை போதிக்கின்றன என்று தெளிவுபடுத்தியுள்ளார். சிறுகதை என்ற இலக்கிய வடிவம் தமிழ் இலக்கியப் பரப்பிலே பூரணமானவடிவு பெறுவதற்கு முற்பட்ட காலத்தில் இவர் தமது சிறுகதைகளை எழுதினார். பிற்காலத்தில் சிறுகதைகள் எழுதிய புதுமைப்பித்தன், அழகிரிசாமி, ஜெயகாந்தன் போன்றாருடைய ஆக்கங்களுடன் இந்த நாற்பது கதைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவற்றில் சிறுகதைகளுக்குரிய பண்புகள் முயற்கொம்பாகவேயுள்ளன என்பது தெளிவு.

ஆர்னல்ட் சாதசிவம்பிள்ளையின் கதைகளில் பஞ்சதந்திரக் கதைகளின் சாயல் தென்படுகின்றது. ஒரு கதைக்குள்ளேயே பல கதைகள் வருகின்றன. மிருகங்கள், பட்சிகள் பேசுவது போல தென்படுகின்றன. இதனை ஆசிரியர் தமது பாயிரத்தில் குறிப்பிட்டு ள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறுவிதையிலிருந்து கப்பு விட்டு கிளைத்தெழும்பும் பெரு விருட்சங்களைப் போல பொதுப்பட சிறிய கதைத் தொடக்கத்தி லிருந்து பெரிய கதைகளை வருவித்துக் கொண்டோம்"

ஆசிரியர் பல போதனைகளை வழங்க வேண்டும் என்ற ஆசையினால் தாம் பல இடங்களில் வாசித்து அறிந்த கதைகளை உள்ளடக்கியிருக்கின்றார். 29வது கதையாகிய சதுமூடர் கதை பல சிறிய சிறிய கதைகளை உள்ளடக்கியது. இதனால் அக்கதையின் இறுதியில் "இக்கதைகளால் மூடன் காரியம் எப்பொழுதும் நகைப்பிற் இடமாம்" என்று உணர்க என்று எழுதினார். சில கதைகளில் பறவைகளே கதா பாத்திரங்களாக இருக்கின்றன. இதற்கு 35வது கதையாகிய "அனுசந்தான புரவி" சிறந்த உதாரணமாகும்.

பல கதைகள் ஐரேப்பிய அராபிய கதைகளின் தழுவல்களாக இருக்கின்றன. இதனால் ஆசிரியருடைய கற்பனை வளத்தை மதிப்பிட முடியாது இருக்கின்றது. உதாரணமாக பொன்ளைந்த பெருமான் கதை, வினையளந்த பெருமான் கதை, கண்ட துண்டங் கண்ட கதை, உபாய சுந்தரி கதை, மௌட்டிய கதுமன் கதை, மாவுத்தர் மூவர் தலையிழந்த கதை, எண்ணெய்ச் சாடி பேசிய கதை, என்பன "அலிபாபாவும் நாற்பது திருடர்களும்" என்ற அராபியக்கதையின் தழுவல் ஆகும். அக்கதையிலே வரும் மார்ஜியானா உபாய சுந்தரியாகவும் அலிபாபா பொன்னளந்த பெருமான் ஆகவும் மாற்றப்படுகின்றனர். ஏழு கதைகளுக்கு "அலிபாபாவும் நாற்பது திருடர்களும்" கரு வழங்குகின்றது.

நாற்பதாவது கதையாகிய புத்திர சிகாமனி கதைதான் ஓரளவு கற்பனைத் திறனும் மண்வாசனையும் கட்டுக்கோப்பும் உடையதாக காணப்படுகின்றது.

ஆசிரியருடைய நடை பெரும்பாலும் வினோதரச மஞ்சரி எழுதிய வீராசாமிச் செட்டியாரின் நடையை ஒத்திருக்கின்றது. நீண்ட வசனங்களில் பழமொழிகளைப் பெய்து மக்கள் சுவைத்துப் படிக்குமாறு எழுதியவர் வீராசாமிச் செட்டியார். இந்த நடையையே ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளை அவர்களும் கையாண்டுள்ளனர். பழமொழிகள் அக்காலத்தில் பெண்கள் உட்பட எல்லாருக்கும் விருப்பமாக இருந்தது என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். புத்திர சிகாமணி என்ற கதையிலே தகப்பன், திருமணம் செய்ய மறுக்கும் மகனுக்கு பின்வருமாறு ஆலோசனை கூறுகின்றார். இதனை ஆர்னல்ட் சாதாசிவம் பிள்ளை கூறுகின்ற முறையில் சொற்சுவையும் பொருட்சுவையும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள், என் மகனே! சற்குணஸ்திரியா? ஆ! மாணிக்கம், முத்து முதலான நவரத்தினங்களிலும் மேலான விலை பெற்றவள். அவள்

"குஞ்சியிழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகுமழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாமென்ற நடுவு நிலைமையாற்
கல்வியழகேயழகு"

என்னும் வாக்கியப்படி கல்வி கற்றவளாய், அக்கல்விச் சிறப்பாலே விசேஷங் கொண்டவளாவாள். "குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணுதல்" என்ற ஆன்றோர் வாக்குப்படி தன் நாயகனை அருமைப் பெருமையாய்ப் பேணித்தான் தொழுந் தேவனுக்கு இரண்டாந் தேவன் தன் கணவன் என்றாற் போற்பாவனை பண்ணி நடப்பாள். தன் கணவன் தன் அன்பிற்கிலக்கான சுந்தரருபியல்லாத போதினும் அவனை அதி சுந்தரனாய் எண்ணிப் பாவிப்பான். அவன் விடா நோயனாய்த் துர்ப்பலப்பட்டிருந்த போதினுஞ் சுகதேகி போல அவனைச் சீராட்டிப், பாராட்டிப் பராமரித்து நடத்துவான். அவன் நாலெழுத்துக் கூட்டிவாசிக்கத் தெரியாத திருமூடனாய்க் கற்றார் சபையில் நிற்க அஞ்சுங் கோழையனாயினும்.

"கவையாகிக் கம்பாகிக் காட்டகத்தே நிற்கு
மவையல்ல நல்லமரம் - சபையகத்து
நீட்டோலை வாசியா நின்றான்"

என்னும் முதுமொழி வாக்கிற்கு மேற்கோள் போல் பாலனாயினுந்தன் பார்வைக்கோ சகல கலைக்கியான் சாகரக் கரை கடந்த பண்டிதனைப் போல அவனை நினைந்து பூசிப்பாள். அவள் குடியிருக்க வீடுவாசலில்லாத வெறுவிலியாயினும், கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன்' என்று நினைந்து நிதித்தலைவனாகிய குபேர ராசனைப் போல அவனை எண்ணி வருவாள். அவன் வயோதிபனாயிருந்போதும் அவனை வாலிபனாய் மதித்து வருவாள். கற்புக்கிருப்பிடமுஞ் சற்குணத்துக்கு உறை விடமுமாகிய நற்பெண்டானவள் தன் கணவனுக்குத் தாசி போற் பணிவிடை செய்து, வேசி போல் அவனைப் பாராட்டி மந்திரிபோல் அவனுக்கு நல்ல உணவு ஊட்டுவாள். ஆர்னல்டின் நடை வீரசாமி செட்டியாரின் நடையை பெருமளவில் ஒத்திருப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியிருக்கையில் மார்கழி மாதத்திற் சம்புகேதரர் சந்நிதியில் மேற்படி தாசிக்கும் திருவெம்பாவை பாடும் முறை வந்த பொழுது "உங்கையிற் பிள்ளை" என்னும் பாட்டு பாடுகையில் அதில் "எங்கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேர்ந்த" என்ற தொடரை அவள் வாயினாற் சொல்லித் தலைகுனிந்து கொண்டதைப் பார்த்து அவளுடனே கூடவிருந்த மற்றத் தாசிகளெல்லாம் புன்சிரிப்புச் சிரித்து தங்களுக்குள்ளே "இவள் சிவன்கோவில் தாசியாய் இருந்தும் பொருமாள் கோவிற் சுயம்பாகியுடனே சம்பந்தப்படுகிறாளே இஃதென்" படிக்கிறது திருவாசகம் இடிக்கிறது சிவன்கோவில் என்பதாக வாயினாற் பேசுகிறதொன்று நடக்கிற தொன்றாயிருக்கிறதே" என்று அவளைப் பரிகாசம் பண்ணினார்கள்" வினோதமஞ்சரி - காளமேகப் புலவர் சரித்திரம் ரைப்பாறவேண்டாம்.

ஆர்னல்டின் நடை பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குரியது. ஆனால் அவரை சிறுகதை எழுத்தாளன் என்று குறிப்பிடலாமா என்பது கேள்விக்குரிய விடயம். அவருடைய கதாபாத்திரங்களின் பெயர்கள் சிதகண்டீவரன், வீம்பாகரன், சத்தியமான்மியன், புண்ணிய கோபன் முதலியன. சம்பவங்களும் வாழ்க்கையில் காணப்படாத அதீத கற்பனையும் புனைவுகளும் கொண்டவை. ஆனால் ஆர்னல்ட் சதாசிவம் பிள்ளைக்கு தமிழ் சிறுகதை வரலாற்றில் ஓர் இடமுண்டு என்பதனை எவரும் மறுக்க முடியாது.

நாம் தினசரி வாழ்வில் சந்திக்கும் சுந்தசாமிப்பிள்ளை, பிரநாயகம்பிள்ளை, முருகதாசர், திரேசா மருதநாயகம் போன்ற பாத்திரங்களையும், யதார்த்த நிலைபரங்களையும் காண முடியாவிட்டாலும் சிறுகதையின் அம்சங்கள் சில இவரின் கதைகளிலும் உண்டு என்பதனையும் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

சிறுகதையின் தொடக்கத்தைப் பற்றிக் கூறும் திருமதி மீனாட்சி முருகரத்தின்ம (புதுமைப்பித்தன் சிறுகதைக்கலை) "முன்னர் வழங்கிய கதைகளைத் தழுவிக் கூட்டியும் குறைத்தும் புதியதாகக் கதைகளை புனைவது அன்று தொட்டே இருந்துவரும் மரபு. பெரும்பாலும் பண்டைக் காவியங்கள் இவ்வாறு தோன்றினவே" என்று குறிப்பிடுகின்றார்.

ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையும் தமது காலத்தின் தேவையை நிவிர்த்தி செய்ய இவ்வாறு எழுதினார். அவரைத் தமிழ் சிறுகதையின் தந்தை என்று கூறமுடியாவிட்டாலும், முதல் முயற்சியாளர்களில் ஒருவர் என்று குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Nine ways to Grow in Tact

01. Remember to tell others things you have heard of read that will please them. Don't neglect to pass along compliments. Flattery, of course, is taboo-because it's insincere. But honest praise is a great part of tact.
02. Don't forget names and faces, if you can help it. People who Keep saying. "I can never remember a name" are much too lazy to develop tact. For anybody can succeed in fixing names and faces in his mind. The will to do so must be there first. Daily practice, then do the rest.
03. When Confidences are shared with you - guard them jealously. Never broadcast idle gossip and malicious rumors.
04. Accent the "You" attidude in your conversation. with enough concern for others. You will cut down on the more egotistic "I", "My", "And" ,"Mine".
05. Don't make fun of others or resort tp sarcasm. People can do without that kind of wit. Instead, make them feel important, as if their capacity for success were positively Unlimited.
06. Ac Quixe the Knack of saying the right under embarrassing circumstances. The idea is to replace inferiorcty feelings in others with a sense of "We" re all in thee same boat.
07. Once you see you're wrong, be quick to say so. The most charming way to correct is to admit it good humorously.
08. Listen more than you speak, smile more then you frown, laugh with rather than at others, And watch your manners whether you feel chippe or not.
09. Above all don't excuse yourself by saying, "I didn't know" gnorance of a law doesn't justify you in breaking it and the same goes for tactlessness. I ts true that a tactless person wounds without knowing and that a selfish person wounds' with to caring. But why Quibble over cause when the effect is the same. So if you want a key to the inner door of success - study the nine point plan toward greater fact. Then you will marvel at the speed with which Opportunities come your way.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர் மீட்பா? உரிய காலத்தில் மீட்பா?

சில ஆண்டுகட்கு முன், 'திடீர் ரசம்' - திடீர் சாம்பாறு', திடீர் இட்டலி' என்று அவற்றிற்குரிய பொருட்களைப் பொடியாக்கி காகித உறைகளில் போட்டு விற்பனைக்குத் தமிழ் நாட்டில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டன. அநேகர் இதனை வாங்கிப் பாவித்தனர். எவ்வித கஷ்டமுமின்றி வேண்டிய தின்பண்டங்களை உடனே செய்யலாம் என்று விருப்புடன் வாங்கிப் பாவித்தனர். ஆனால் இவற்றிற்கு இன்று "கோக்கோ கோலா" "பெப்சி" ஆகிய பானங்களுக்கு நேர்ந்த கதி தான் - இந்த திடீர் பக்கெற்றுகளுக்கும் நேர்ந்திருக்க வேண்டுமென எண்ணத் தோன்றுகிறது.?

இதைப் போலவே, இன்று திடீர், மீட்பு' - மலிவான கிருபை' என்ற சுலோகங்களுடன் பற்பல சமயக் குழுக்கள் தோன்றி வியாபார ரீதியில் செயல் படுவதை நாம் காண்கின்றோம். எடுத்துக்காட்டாக - ஜப்பான் நாட்டில் 1947ல் 136 புதிய சமயங்களும், சமயப் பிரிவுகளும் பதிவு செய்யப்பட்டிருந்தன. 1949ல் கிழமைக்கு ஒரு புதிய சமயம் பதிவாயிற்று என அரசின் பதிவேடுகள் காட்டுகின்றன. என வரலாற்று அறிஞர் கூறுகின்றனர். 1951ல் 490 புதிய சமயங்கள், சமயப் பிரிவுகள் ஜப்பானில் துவங்கப்பட்டனவாம் - என்கிறார். இறையியலாளர் கோசுக்கே கோயாமா.

இப்புதிய சமயங்களில் பெரும்பாலானவை "திடீர் சமயங்கள்" இவை உலக ஆன்மீகத்திற்குரிய "திடீர் இலாபங்களை" வாக்களித்தன. இவைகளிற் சில, மக்களின் சூதாட்ட மனப்பான்மையைக் கவர்ந்தன. மனிதனின் மகிழ்ச்சிக்கு ஏற்றவாறு தெய்வங்களைப் பயன்படுத்தி "உடனடி மீட்புப் பெறலாமென" இத் திடீர் சமயங்கள் போதித்தன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு ஜப்பானில் அளவு கடந்த சமயங்கள் பெருகி வந்ததைக் கவனித்த இன்றைய சமயத் தலைவர்கள், கடந்த 2500 ஆண்டுகளாக உலகில் நிலவி வரும் ஐந்து பெரிய - வரலாற்றுச் சிறப்பு மிக்க சமயங்களை நினைவு கூரும்படி அழைக்கின்றனர். அவற்றுள் மூன்று சமயங்கள் (யூத சமயம், கிறிஸ்தவ, இஸ்லாம்) - கிழக்கு நாடுகளிலிருந்து வந்தவை. இரண்டு சமயங்கள் (இந்து, பௌத்தம்) இந்தியாவில் தோன்றின.

இப்பெருஞ் சமயங்கள் பல நூற்றாண்டுகளாக மக்கள் நடுவில் நிலவி வருகின்றன. இன்று கோடிக் கணக்கான மக்களின் மனைதைக் கவர்ந்துள்ளன. இச்சமயங்களில் மிகப் பிந்தியது இஸ்லாம். முகமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி மூலமாக இச்சமயம் வளர்ந்தது. இன்று சமய வரலாற்றின்படி சமயத்தைத் தழுவியர்கள் 1.2 கோடி மக்கள் கிறிஸ்தவ சமயத்தவர் 84 கோடி, இஸ்லாமிர் 40 கோடி, இந்துக்கள் 33.6 கோடி, புத்தர்கள் 15.7 கோடி மக்கள் எனக் காண்கிறோம்.

இப்பெருஞ் சமயங்கள் மலிவான திடீர் மீட்பை வாக்களிக்கும் திடீர் சமயங்கள் அல்ல, மேல் நாடுகளில் ஒரு எந்திரத்தில் காசைப் போட்டு, "கோகோ கோலா" போத்திலைப் பெற்றுக் கொள்வதைப் போல் மீட்பைப் பெற்று விடமுடியாது. மலிவு விற்பனை, உடன் விற்பனை எந்திரம் முதலிய வியாபார தந்திரங்களைப் போன்ற இலவச மீட்பு முறையைப் பெரிய சமயங்கள் போதிக்கவில்லை.

"தூய்மையானது எதையும் நாய்களுக்குக்
கொடாதீர்கள்: உங்களிடமுள்ள
முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதீர்கள்;
போட்டால், அவை தங்கள் கால்களால்
அவற்றை மிதித்து விட்டுத்திரும்பி
உங்களைக் கடித்து குதறும்" (மத் 7:6)

மலிவு மீட்பு (இலவச இரட்சிப்பு) என்பது பொய் மீட்புதான். விலை கொடுத்துத்தான் உண்மை மீட்பைப் பெற முடியும். மிகுந்த சுய வெறுப்பு, சுய ஒடுக்கத்திற்குப் பின்பு தான் கௌதம புத்தர் "ஒளி" பெற்றார். மலிவுக் கடையிலிருந்து அவரது மீட்பின் செய்தி வரவில்லை. அவரது முதல் அருளுரை 'தம்மகக்க பவட்டனா சுத்தா' எனப்படும். இதில் புத்தரின் மீட்பின் செய்தி கூறுப்படுகிறது. இந்த முதல் அருளுரை எளிய மீட்பை மனிதனுக்கு வாக்களிக்கவில்லை. நான்கு சீரிய உண்மைகள் தான் முதல் அருளுரையின் மையப்பகுதி.

மலிவான திடீர் மீட்பை கிறிஸ்தேசுபிரான் வாக்களிக்கவில்லை - அவர் கூறியதைக் கவனியுங்கள்:

"ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால்,
அவன் தன்னைத் தான் வெறுத்து, தனக்குரிய
சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப்
பின்பற்றி வரட்டும். எவன் தன் உயிரைப்
பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறானோ அவன்
அதை இழந்து விடுவான்; என் பொருட்டுத்
தன் உயிரை எவன் இழக்கிறோனோ, அவன்
அதைக் கண்டு கொள்வான்." (மத் 16:24,25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவுலடியாரின் வாழ்க்கையைப் பற்றி நாம் அறிவது யாதெனில் - இயேசு கிறிஸ்துவின் மூலம் அவர் பெற்ற மீட்பு மிகுதியான சுயவெறுப்பை அவரில் உண்டாக்கியது. அவர் கூறியதைக் கவனியுங்கள்.

"இந்நேரம் வரையில் நாங்கள் பசியோடிருக்கிறோம்
தாகத்தோடிருக்கிறோம், ஆடையின்றி இருக்கிறோம்,
அடிக்கப்படுகிறோம், தங்க இடமின்றித் தவிக்கிறோம்
எங்கள் கையால் பாடுபட்டு உழைக்கிறோம்.
நாங்கள் சபிக்கப்படும் போது ஆசி கூறுகிறோம்,
துன்பப்படும் போது பொறுமையோடிருக்கிறோம்.
இகழப்படும்போது பரிவு காட்டும்படி கேட்கிறோம்.
நாங்கள் உலகத்தின் கழிவுப் பொருள்கள்
போலானோம், இன்று வரையில் எல்லாவற்றின்
கசடெனக் கருதப்பட்டு வருகிறோம்" (1கொரி 4:11-13)

"திருச்சபை வரலாற்றில் நாம் மன ஒறுத்தலினால் வரும் மீட்பை விட எளிய நிலையில் கிடைக்கும் மீட்பையே பலர் வாஞ்சையோடு தேடினார்கள் என்பதையே காண்கின்றோம். குறிப்பாக, இப்பிரச்சினையினால் தான் 16ம் நூற்றாண்டில் மாட்டின் லூத்தரின் சீர்திருத்தம் உண்டாயிற்று. திருச்சபை அனுமதியுடன் பாவமன்னிப்புச் சீட்டுகள் விற்கப்பட்டன. குறிப்பிட்ட ஒருவரின் நன்மைக்காக வழங்கப்படும் ஆவிக்குரிய காசோலைதான் அச்சீட்டு - அவர் இறந்தவராயினும் உயிரோடிருப்பவராயினும் பறவாயில்லை - இறந்தவரானால் சடநிலையிலிருந்து மோட்சத்துக்கு உடனே போகும் வாய்ப்பை அது அவருக்கு அளிக்கும், உயிரோடிருப்பவருக்கு, அவர் பாவமன்னிப்பு குருவிடம் சரியாகப் பாவ அறிக்கை செய்தால் பாவத்துக்காக முன்பு பெற்ற எல்லாத் தண்டனைகளும் சடநிலைத் தண்டனைகளும் மன்னிக்கப்படும்" என்பதே.

அன்றைய இறையியல் அறிஞர் ஜோன் டெட்சல், 'மலிவு மீட்பை' எல்லாருக்கும் வழங்கினார். அந்நூலின் பிற்தொரு பகுதியைக் கவனியுங்கள்.

"அவர் அருளுரையை முடிப்பார். உடனே பாவமன்னிப்புச் சீட்டுப் பெட்டி அருகில் செல்வார் தனது தந்தைக்காவது அல்லது இறந்தவேறொரு நபருக்காவது ஒரு சீட்டு வாங்குவார். பெட்டியில் காசு விழும் ஒலி கேட்கும் - உடனே இப்போது அவருடைய மீட்பு உறுதியாயிற்று, இனி நான் அவருக்காக ஒரு போதும் இறை வேண்டல் செய்ய வேண்டியதில்லை, என்று சொல்வார் - இவ்விதமாய் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களைத் தூண்டி விடுவார். குறிப்பாக உணர்ச்சிவசப்படும் பெண்களை இவ்விதம் தூண்டி விட்டு அவர்களும் பெட்டியருகில் வந்து பாவமன்னிப்புச் சீட்டு வாங்கும்படி செய்வார்"

பெட்டியில் விழும் காசு ஓசையினால் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி ஆளுகை செய்யப்பட்டது. இந்நிலையில் மனிதன் கடவுள்மீது பற்றுதி கொள்வதில்லை கடவுளைப் பயன்படுத்துகிறான் என்பதே இதன் பொருள், - இது சரியா? சிந்தியுங்கள்.

பெரும் வரலாற்றுச் சமயங்கள் மலிவு அல்லது இலவச மீட்பைக் கற்பிப்பதில்லை. இதனை ஆராய்ந்து படிப்பது பெரும் பயனை அளிக்கும். மேலும் தொடர்ந்து கவனியுங்கள் - மனம் மாறிய குமாரன் உவமையில் மகன் திரும்பி வருவது உள்ளத்தை உருக்கும் வகையில் விவரிக்கப் பட்டுள்ளது.

"அவன் புறப்பட்டுத் தன் தந்தையிடம் வந்தான். இவன் தொலைவில் வரும் போதே தந்தை அவனைக் கண்டு விட்டான். கண்டதும் மனம் உருக, அவன் ஓடி அவனைக் கட்டித் தழுவி முத்தமிட்டான். மகனோ தந்தையிடம் "அப்பா விண்ணகத்திற்கு விரோதமாகவும் உமக்கு விரோதமாகவும் பாவம் செய்தேன். இனி நான் உம்முடைய மகன் என்று சொல்லப்படுவதற்குத் தகுதியற்ற வன்" என்று சொன்னான். ஆனால் தந்தையோ தன் வேலைக்காரரை வரவழைத்து - நீங்கள் உடனே முதல்தரமான உடையைக் கொண்டு வந்து இவனுக்கு உடுத்துங்கள். இவன் கைக்கு மோதிரம் போடுங்கள், காலுக்கு மிதியடி அணியுங்கள். கொழுத்த கன்றை கொண்டு வந்து அடித்துச் சமையுங்கள் நாம் உண்டு களிப்போம். இந்த என் மகன் செத்துப் போயிருந்தவன், இப்போது உயிரோடு வந்திருக்கிறான் காணாமற் போயிருந்தவன், இப்போது கிடைத்து விட்டான் என்றார். அவர்கள் அப்படியே செய்து களிப்புடன் கொண்டாட்டங்களைத் தொடங்கினார்கள் (லூக் 15:20 - 24)

திமீர் மீட்பு தனக்குக் கிடைக்கும் என மகன் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை "இனி நான் உம்முடைய மகன் என்று சொல்லப்படுவதற்குத் தகுதியற்றவன்" என்று அவன் சொல்லுகிறான். தன் தந்தையின் வீட்டிற்கு வருகையில் அவன் மெத்தனமாக வரவில்லை. அவன் உணர்வுமிக்கவனாக வந்தான். தன் தந்தையைச் சந்திக்கையில் என்ன சொல்வோமென்று ஆயத்தத்துடன் வந்தான் தனது தீர்மானத்தின்படி அதைத் தந்தையிடம் சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இதற்கு முன்பே தந்தை தன் மகனின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தான். - தொலைவில் வரும் போதே அவன் மகனைக் கண்டு விட்டான். கண்டதும் மனமுருகினான். மகனிடம் ஓடினான். மகனைக் கட்டித்தழுவி முத்தமிட்டான். செத்தவன் உயிரோடு வரும் வேளையில் செய்யப்பட வேண்டியதைச் செய்யத் தன் பணியாட்களுக்கு கட்டளையிட்டான். உடை, மோதிரம், மிதியடி, ஆகியன 'மகன்' என்னும் அந்தஸ்தை அவனுக்கு மீண்டும் அளிக்கின்றன. எந்தக் கன்றையாவது அல்ல, கொழுத்த கன்றைக் கொண்டு வாருங்கள் என்றான்!

காத்திருந்த தந்தை கட்டித் தழுவி முத்தமிட்டார். முத்தமிட்ட வேளையில் மகன் மீட்படைந்தான். இந்த வேளையே மீட்பின் வேளை - சோம்பலான கரிசனையற்ற அல்லது உணர்வற்ற ஒரு தந்தை கொடுத்த முத்தம் அல்ல - பிரிவின் கொடுமையை (இந்த என் மகன் செத்துப் போயிருந்தவன்) அனுபவித்த தந்தை மகனுடன் மீண்டும் ஒன்று கூடுவதின் மகிழ்ச்சி - (இப்போது உயிரோடு வந்திருக்கிறான்) இவைகளை முழுமையாக அனுபவித்த ஒருவர் கொடுத்த முத்தம் உணர்வற்ற காட்சி அல்ல.

இது உணர்ச்சி மிக்க ஆன்மீகப் பொருள் பொதிந்த கதை. காத்திருந்த தந்தை காத்திருப்பதின் வேதனையைக் கண்டவர் முத்தமிட்டவேளை மிக அருமையான வேளை அது சாதாரண முத்தமல்ல பிரிவுக்குப் பின் கூடுவதின் மகிழ்ச்சியை முத்திரை யிட்ட முத்தம். முத்தமிட்ட இந்த வேளையில் மகன் மீட்படைந்தான்.

லூக்கா நற்செய்தி நூலில் முக்கியம் பெற்ற வேறொரு காட்சியைக் கவனிப்போம். அது தலைமை ஆயக்காரன் சகேயுவின் வரலாறு (லூக் 19: 1 - 10)

> "ஆண்டவரே நான் இப்போதே என் சொத்தில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன். நான் யார் யாரிடம் அநியாயமாக என்னென்ன வாங்கியிருக்கிறேனோ, அவற்றையெல்லாம் நான்கு மடங்காகத் திரும்பிக் கொடுத்து விடுகிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி, இன்று இந்த வீட்டாருக்கு மீட்பு வந்திருக்கிறது, இவனும் ஆபிரகாமின் மகன் தானே, காணாமற் போயிருப்ப தைத் தேடுவதற்கும் அதை மீட்பதற்குமே மனுமகன் வந்திருக்கிறார்' என்று சொன்னார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயக்காரனின் பாணியில் சகேயு தனது விசுவாசத்தை அறிக்கையிட்டான். இயேசுவைப் பார்க்க மரத்தின் மீதேறியிருந்ததாக அவன் நினைத்தான். ஆனால் இயேசு அவனுக்காகக் காத்திருந்தார். திடீரென இதை அவன் கண்டான், நடுங்கினான் விரைவாக இறங்கி வந்து அவரை மகிழ்வுடன் வரவேற்றானல்லவா?

இன்று மீட்பு வந்திருக்கிறது. இன்று தேடிவரும் இயேசு காணாமற்போன சகேயுவைக் கணண்டு பிடித்தபோது, தனக்கே உரிய முறையில் சகேயு பதிலளித்த போது மீட்பு வந்தது. இந்த வேளையில் அவன் புத்துயிர் பெற்றான்.

"இயேசு கப்பர்நகூம் என்ற ஊருக்குள் சென்ற போது நூற்றுவர் தலைவன் ஒருவன் அவரிடம் உதவி நாடி வந்து 'ஐயா என் பணியாள் திமிர்வாதத்தினால் தாங்கொணா நோவுடன் வீட்டில் கிடக்கிறான்' என்றான். இயேசு 'நான் வந்து அவனைக் குணப்படுத்துகிறேன்' என்று சொன்னார். நூற்றுவர் தலைவனோ 'ஐயா நீர் என் வீட்டிற்குள் வர நான் தகுதியற்றவன் ஒரு வார்த்தை மட்டும் செல்லும், அப்போழுது என் பணியாள் குணமடைவான். நான் அதிகாரத்துக்குட்பட்ட மனிதன் தான், எனக்குக் கீழேயும் படை வீரர் உண்டு. நான் ஒருவரிடம் "போ" என்கிறேன். அவன் போகிறான் - வேறொருவனிடம் "வா" என்கிறேன் அவன் வருகிறான். என் அடிமையிடம் "இதைச் செய்" என்கிறேன்., அவன் செய்கிறான் என்றான்.

அதைக் கேட்டு இயேசு வியப்படைந்து தமக்குப் பின் வந்து கொண்டிருந்தவர்களை நோக்கி "ஒன்றைத் திட்டமாக உங்களுக்குச் சொல்லுகிறேன் - இத்தகைய நம்பிக்கையை நான் இஸ்ரவேலருக்குள் எவரிடமும் கண்டதில்லை" என்றார். பிறகு இயேசு நூற்றுவர் தலைவனைப் பார்த்து "நீ போகலாம் - நீ நம்பியபடியே நடக்கும்' என்று சொன்னார் - அவ்வேளையிலே அவனின் பணியாள் குணமடைந்தான். (மத் 8:5 - 13)

யூதனல்லாத ஓர் இராணுவ அதிகாரியின் உறுதியான விசுவாசத்தை மையமாகக் கொண்டுள்ளது இக்காட்சி விசுவாசமே "அவ்வேளையிலேயே புத்துயிர் அளித்தது. 'கோகோ கோலா' எந்திர மீட்பு போல் இக்காட்சி தோன்றுகிறது அல்லவா? இராணுவ அதிகாரி தன் பிரச்சினையை இயேசுவிடம் கொண்டு வந்தான். அவனுடைய பிரச்சினை அவனை இயேசுவிடம் தள்ளிச் சென்றது என்றே கூற வேண்டும். திடீர் மீட்பை அவன் எதிர்பார்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் தனிப்பட்ட பிரச்சினையைத் தீர்க்க இயேசுவின் குணமாக்கும் ஆற்றலைப் பயன்படுத்த அவன் ஆசித்திருக்கலாம். என்வேலைக்காரன் திமிர்வாதத்தினால் தாங்கொணா நோவுடன் வீட்டில் கிடக்கிறான். (இதுவே அவன் பிரச்சினை) கடவுளும் மனிதனும் விசுவாசத்துடன் சந்திக்கும் சந்திப்புதான் மீட்பின் வேளையை வரச் செய்கின்றது. திருமறை காண்பிக்கும் உலகில் இப்படியே நடைபெறுகிறது என அறிக.

இது சந்திப்பு - உபயோகம் அல்ல. கடவுளும் மனிதனும் சந்திக்கையில் 'அந்த வேளையில்' கடவுளின் மீட்பு வருகிறது. திடீர் மீட்பு சமயங்களெல்லாம் ஆபத்தானவை - மனிதனின் நலனுக்காக கடவுளைப் பயன்படுத்தவே அவை தோன்றுகின்றன. அவை தரும் மீட்பு உண்மை மீட்பு ஆகாது.

இராணுவ அதிகாரியின் விசுவாசத்தை இயேசு கண்டார். 'அதைக் கேட்டு, இயேசு வியப்படைந்தார். அவன் தம்மைப் பயன்படுத்தவில்லை. விசுவாசத்துடன் தம்மைச் சந்திக்கிறான் என அவர் கண்டார். பயன்தேடி வருவது, சந்திக்க வருவது இந்த வேறுபாட்டினை இயேசு ஏற்படுத்தினார். இந்த இராணுவ அதிகாரியின் வரலாறு "கோகோ கோலா" எந்திர மீட்புக் கதை அல்ல. உரிய பணத்தைப் போட்டதும் "கோகோ கோலா" போத்தல் வெளியே வருவது போன்றதல்ல என அறிக, உலகச் செல்வத்திற்காக மதம் மாறுவது தவறு. மன மாற்றத்துடன் வருவோரை இயேசுபிரான் ஒரு போதும் தள்ளிவிடமாட்டார்.

விசுவாசத்துடன் கடவுளிடம் வருதல் (கடவுளும் மனிதனும் சந்தித்தல்) தானாக உண்டாவதில்லை - வேதனை நிறைந்த உண்மை வரலாற்றிலேயே சந்திப்பு ஒவ்வொன்றும் நடைபெறுகிறது.

திருமறை விசவாசம் விதிக்கும் தடை உத்தரவு இதுவே - இறைவனைச் சுயநலத்திற்காக பயன்படுத்தாதீர் - மலிவான திடீர் மீட்பு கிறிஸ்தவ சமய நெறி அல்ல - ஆனால் திருமறை விசுவாச நெறி மிக அருமையானது. ஏற்ற வேளையில் உரிய காலத்தில் மீட்பு கிடைக்கும் என்பதே மனமாற்றமே தேவை மதமாற்றமல்ல என்பதை அறிக.

**DRA**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமென்னும் மேடையில்

-மாற்றத்திற்கான அழைப்பு-

நான்கு நற்செய்தி நூல்களிலும் கிறிஸ்துவின் சீடத்துவத்திற்கான அழைப்பு குறித்துக் காணக்கிடைக்கின்றது.

"என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவா் ஆக்குவேன் என்றாா்." மத்தேயு 4:18-22 பகுதியில் கலிலேயாக் கடல் ஓரத்தில் பேதுரு எனப்படும் சீமோன், அவா் சகோதரா் அந்திரேயா ஆகியோரை அழைத்த நிகழ்வினையும் தொடா்ந்து செபதேயுவின் பிள்ளைகளான யாக்கோபு அவா் சகோதரா யோவனை யும் அழைக்கின்ற நிகழ்வினையும் காணலாம். அவா்கள் இயேசுவின் அழைப்பை ஏற்று தங்கள் வலைகள், வள்ளம், தந்தை வேலை யாட்கள் அனைவரையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின் தொடா்ந்து சென்றனா்.

இவா்கள் முற்று முழுதாக எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவின் சீடா்களாக அவரைப் பின்பற்றினாா்களா? என இந்நிகழ்வில் ஓா் வினாவைத் தொடுத்தால் அவா்கள் முழுமையாக விட்டுவிட்டுப் போகவில்லை என்பதே பதிலாக அமையும். யோவான் நற்செய்தி 21:3 படி "சீமோன் பேதுரு அவா்களிடம் நான் மீன் பிடிக்கப் போகிறேன் என்றாா். அவா்கள் நாங்களும் உமமோடு வருகிறோம். என்று போய்ப் படகில் ஏறினாா்கள். தங்கள் சொந்தத் தொழிலுக்குத் திரும்பினாா்கள். முழுமையான இறையரசின் பணிக்கு இயேசுவின் வழியில் எல்லாவற்றையும் விட்டுப் போகாத ஓா் நிலையை இப்பகுதி எடுத்துக் காட்டுகின்றது. இவ்வழைப்பு முழுமையை பூரணத்துவத்தை அடையவில்லை.

முதலாம் ஏற்பாட்டுப் பகுதியில்1 இராஜாக்கள் 19:21 இறைவனின் பணிக்கான முழுமை பெற்ற அழைப்பினைக் காண்கிறோம். எலிசா, எலியாவின் பின் பணிக்கென எலியாவினால் அழைக்கப்பட்ட போது, எலிசா தன் தாய் தந்தையிடம் விடை பெற்று வர அனுமதி கேட்டுச் சென்று அவா்கள் ஆசீா்வாதத்துடன் திரும்ப வந்து தன் "ஏா் மாடுகளைப் பிடித்து அடித்து தாம் உழுத கலப்பைக்கு நெருப்பு மூட்டி அம்மாட்டு இறைச்சியைச் சமைத்து மற்றவா்களுக்குப் பரிமாற அவா்களும் அதையுண்டனா். பின்பு அவா் புறப்பட்டு போய் எலியாவைப் பின்பற்றிப் பணிவிடை செய்யலானாா்" என்ற முழுமையான பின் தொடா்தலைக் காண முடிகிறது. இவ்வாறே இஸ்ரேயேலின் தந்தையாகிய யாக்கோபும் தன் தாய் தந்தையின் ஆசியுடன் பதான் அராமில் உள்ள தாய்மாமன் இலாபான் வீட்டுக்குச் செல்வதைக் காணலாம். (தொடக்கநூல் 28:7) முதலாம் ஏற்பாட்டில் எலிசாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பு பூரணத்தை நோக்கிய முழுமையான உச்சக்கட்ட அழைப்பாகக் காணப்படுகின்றது. எலிசா தனது வாழ்வுக்கு ஆதாரமானவற்றை அடிப்படையான தனது வாழ்வுக்கான பொருளாதாரத்தையே உடைத்து அடித்து நொருக்கி சூழ உள்ளவர்களுக்கு விருந்து வைத்து பகிர்ந்து இனி மீண்டும் பழைய பணிக்குத் திரும்ப முடியாதவாறு, இனி யாவற்றையும் தாங்குபவர் கடவுளே என முற்றும் முழுதாக அவருக்கே தன்னை அர்ப்பணிக்கிறார்.

இரண்டாம் ஏற்பாட்டில் யோவான் 21:1 -14 நிகழ்வில் இவ்வாறு இயேசுவின் சீடர்களும் தமது வாழ்வின் அடிப்படைப் பொருளாதாரத்தை முற்று முழுதாக விட்டுவிட்டு அவரைப் பின் தொடர சீடத்துவத்தின் முழுமையை அடைகின்ற ஓர் நிலை யேற்படுகின்றதை நோக்கலாம் இந்த முழுமை நிலை அவர்கள் இயேசுவை, உயிர்த்தெழுந்த இயேசுவை திபேரியாக் கடல் அருகே மூன்றாம் முறையாகத் தோன்றிய இயேசுவை தரிசித்த பின்னே ஏற்பட்டது எனலாம். இவ்வாறாக இயேசுவின் அழைப்பை முழுமையாக ஏற்காத சீடர்களுடைய தளம்பல் நிலை இந்நிகழ்வின் மூலம் முடிவுக்கு வந்து சீடர்கள் தமது செழிப்பான பொருளா தாரத்தை துறந்து இறையரசின் பொருளாதாரத்தை உயர்த்த அதில் முழுப் பற்றுமை கொண்டு இறுதிவரை நிலை நின்றனர். இவ்வாறாக உயிர்த்தெழுத்த இயேசுக் கிறிஸ்துவின் பகிர்வை பெற்ற மக்களுக்கு தளம்பல் நிலையில்லை. இன்றும் இந்தகைய நிலைகள் வாழ்வுச் சூழலில் அலை மோதக் காண முடிகிறது.

இன்று 2004ம் ஆண்டின் வாழ்வுச் சூழலில் "மதமாற்றச் சட்டம்" எனும் வரைவு குறித்த சூழமைவு சிறுபான்மை அழைக்கப்பட்ட மக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு ஓர் தளம்பல் நிலையை உருவாக்கும் சூழலைத் தோற்று வித்து நிற்கின்றது.

இதே தன்மையை ஒத்ததான ஓர் நிகழ்வினை ஏசாயா 36ம் அதிகாரத்திலும், 2 அரசர்கள் 18ம் அதிகாரத்திலும் வாசித்தறியலாம் சமாரியா சிரியாவிடம் வீழ்ந்து விட்ட நிலையில் அசீரிய அரசன் சனகெரிபுவின் அச்சுறுத்தலில் யூதேயாவின் மேல் விழுகின்றதையும் யூதா நகர்கள் அனைத்தும் படையெடுப்பில் விழுந்து விட்ட நிலையில் எருசலேமில் இருந்த அரசனான ஏசேக்கியாவிற்குத் தொடர்வதையும் வாசிக்கலாம். பல பெறுமதி மிக்க பொருட்களை யூதேயாவின் அரசன் எசேக்கியா அசீரிய அரசனுக்குக் கப்பமாகக் கொடுத்தும், அசீரிய மன்னன் பெரும் படையை எருசலேமின் அரசருக்கு எதிராக அனுப்பினார். இப்படையினர் எருசலேமை வந்தடைந்து, வண்ணான் துறை வழியருகிலுள்ள மேல் குளத்துக் கால்வாய் அருகே நின்றனர். இவ்வாறான நிலையில் படையின் தலைமையாளரான தர்தான, இராப்சாரி, இரம்சாங்கே, ஆகியோர் அரசரைத் தம்மிடம் அழைந்தனர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எசேக்கியா அரசன் சார்பில் அரண்மனையின் மேலாளனும் இலக்கியாவின் மகனுமான எலியாக்கிமும் எழுத்தனான செபுனாவும் அரசனுடைய பதிவாளனும் ஆசாப்பின் மகனுமான யோவாகும் அவர்களைச் சந்திக்கச் சென்றனர். சந்திக்கச் சென்றவர்களிடம் இரப்சாக்கே அசீரிய மன்னின் செய்தியாக அவரின் படை பலத்தைப் புகழ்ந்து அசீரிய மன்னன் ஆண்டவர் திருவுளம் படிதான் ஆண்டவர் கூறி நாட்டை அழிக்கவந்துள்ளதாக கூறினான். இவ்வாறு இரப்சாக்கே கூறக்கேட்ட இலக்கியாவின் மகன் எலியாக்கிமும் செபுனாவும் யோவாகும். இரப்சாக்கேயை நோக்கி "உம்பணியாளராகிய எங்களோடு சிரிய மொழியிலேயே பேசும். அது எங்களுக்குப் புரியும் மதிலின் மேல் இருக்கும் மக்கள் காதில் விழும்படியாகக யூத மொழியில் எங்களோடு பேச வேண்டாம் என்றனர்." (2 அரசர்கள் 18:26) "அதற்கு அவன் அவர்களிடம்" என்தலைவர் என்னை அனுப்பியது உங்கள் தலைவரிடமும் உங்களிடமும் மட்டுமா? தங்கள் மலத்தைத் தின்று தங்கள் சிறு நீரை குடித்து உங்களுடன் மடியவிருக்கும் மதிற்சுவர் ஆட்களுக்கும் இது புரியட்டும் என்றான். (2அரசர்கள் 18:27) இவர்கள் அசீரிய மொழியை மதிப்பதாகக் காட்ட சிரிய மொழியில் பேசும்படி கூறியிருக்கலாம். அத்துடன் பொது மக்களை, சாதாரண மக்களை கலவரம் படுத்தும் செய்தியை பரம்பாமல் இருக்கவும் இப்படி கூறியிருக்கலாம் ஆனால் அசீரிய மன்னனின் பிரதிநிதி இரப்சக்கேயின் நோக்கம் மக்களை பயமுறுத்தி கேவலப்படுத்தி சரணடையத் தூண்டுவதாகும். இதில் மற்றோரு நோக்கம் அவர்களைக் கலவரப்படுத்தி, யூதா அரசனுக்கு எதிராக கலவரத்தில் ஈடுபடுத்துவதும் கோபம் கொள்ளச் செய்து அவர்கள் நிலைப்பாட்டை குலைத்து தோல்வி அடையச் செய்வதுமாகும்.

மேலும் அசீரிய அரசனிடம் சரணடைந்தால் (இன்றைய உலகமயமாதல் கொள்கையினரிடம் சரணடைந்தால்) கிடைக்கும் நன்மைகளாக "நீங்கள் ஒவ்வொருவரும் தம் சொந்த திராட்சை கொடியின் பழத்தைச் சுவைத்து தம் சொந்த அத்திமரத்தின் பழத்தை தின்று சொந்த கிணற்றின் தண்ணீரைக் குடிக்கலாம். (2அரசர்கள் 18:31-32) எனக் கூறி சாகாமல் இருக்கப் பாருங்கள் எனக் கூறுகின்றான். இரம்சாக்கே, இன்றைய மேற்கு உலகமயமாதல் அரசியலும் இவ்வாறு கூறினும் எல்லாம் மாறியே தலைகீழாக நடக்கின்றமையைக் காணலாம். இவ்வாறு போலியான ஒன்றை நயம்படக் கூறி விடுதலைக்குரிய ஒன்றாகக் காட்டி ஏமாற்றுப் பொருளாதாரமொன்றை முன்வைக்கின்றனர். ஏசாயாதீர்க்கர் இவ்வேளை ஏசேக்கியா அரசருக்கு பயத்தை நீக்கும் செய்தியை அறிவித்து ஏமாற்றுவாதிகளின் அரசியலைத் தகர்த்துப் போலிப் பொருளாதார பிரச்சாரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகர்க்கிறார். (ஏசாயா 37:1- 4) நம்பிக்கையின் செய்தியைக் கூறி உரைக்கிறார் இன்று மத அடிப்படை வாதிகளின் செயற்பாடுகள் உலகமயமாதல் பொருளாதார நெருக்குதல்கள் மத்தியில் வாழ்ந்தாலும் உயிர்த் தெழுந்து வாழ்வின் சாவாமைக்கு உறுதியழித்த இயேசுக் கிறிஸ்துவின் விடுதலைக் கூறுபாடுகளைப் பின்பற்றும் கிறிஸ்தவர்கள் இந்த சல சலப்புகளுக்கு அஞ்சத் தேவையில்லை.

எமது நாட்டுச் சூழலில் 1956ம் ஆண்டின் தனிச்சிங்களச் சட்டம் வர அனைவரும் குழப்பமடைந்தனர். சிறுபான்மை அடிப்படை வாதிகள் மக்களைக் குழப்பி பல கலவரங்களை ஏற்படுத்தினர். இது தவறு என உணர ஐம்பது வருடகாலம் பிடித்தது.

இவ்வாறு 60 - 70 களில் ஞாயிறு வேலை நாள் திட்டமும் கிறிஸ்தவர்களிடையே அச்சத்தைத் தோற்று வித்தாலும் பயனற்று, பலனற்று, வலுவிழந்து, வழக்கற்றுப் போனது. இப்பொழுது கொண்டு வர எதிர்பார்க்கப்படும் மதமாற்றச் சட்டமும் அடிப்படை வாதிகளின் கனவு அரசியலை நனவாக்கப் போவதில்லை என்பது உறுதி. இதுவும் பயனற்றுப் போகும். இவை யாவும் அரசியல் இலாபத்திற்காக சுய நல விஷமிகளின் தொலைநோக்கற்ற நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும். அழிவுக்கும் வழிவகுக்கும் சட்டங்கள் மக்களால் என்றோஒருநாள் தோற்கடிக்கப்படும்.

இவை அரசியல் ஆதாயம் தருபவையே அன்றி மக்கள் நலனுக்குரியவையல்ல. உயிர்ந்தெழுந்த இயேசு தன்னைத்தான் தந்து மக்களை விடுதலையாக்கும் இனமொழி சமய சமூகப் பொருளாதார கலாச்சார விடுதலை நோக்கிய இறையரசுக்கு அழைக்கிறார். இறையரசின் வழியில் இயேசு காட்டிய வழி மதமல்ல அது ஓர் வாழ்வு நெறி. இதன் அடிப்படை கூறுகள் ஏனைய நெறிகளிலும் அறியப்படாமல் பிரதிபலிப்பதை அடிப்படை வாதம் உணரத் தடுக்கின்றது. சாதாரண மக்கள் பயமின்றி வாழவே இயேசு சமூகத்தினால் தள்ளப்பட்ட பெரும்பான்மை மக்களுடன் தன்னை அடையாளப். படுத்தினார். (Jesus christ identified him self with the poor and maginalised)

இயேசு ஒருபோதும் குறுக்கு வழியில் உணவு கொடுத்து அறநெறி அற்ற மதமாற்றம் செய்யவில்லை (Unethical conversion) அப்படியானால் தீயவன் அவரிடம் முதல் சோதனையின் போது கற்களை அப்பமாக்கும் படி கூறிய போது அப்படிச் செய்து இலகுவில் பலரையும் தனது வழிக்கு கொண்டு வந்திருக்கலாம். உலகின் அதிகாரம் அனைத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற தீயவனின் காலில் வீழ்ந்து அதைப் பெற்றிருக்கலாம். அவர் அப்படிச் செய்யவில்லை (லூக்கா 4:1-13) எனவே இந்த மதமாற்றுச் சட்டம் இறையரசுக் குரியவர்களை ஒன்றும் செய்யாது வரலாற்று இவ்வாத அடக்கு முறைகள் கிறிஸ்தவர்களைப் புடமிட்டு கிறிஸ்துவின் வழியில் இறையரசு உறுதிப்பட்டு உலகெங்கும் அதிகம் பரவவே வழிவகுத்தது எனலாம். மனிதன் தான் விரும்பும் சரியான வழியில் பயணப்பட இறைவன் பூரண சுயாதீனத்தையும் உரிமையையும் வழங்கியுள்ளார். நாம் சூழலுக்கு ஏற்ப அமைதி காத்து அவர் அழைப்பின் பக்குவத்தைப் பாதுகாக்க இறைவன் நம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்.

வண. ஈனொக் பூ. புனிதராஜா.

## THE CONCEPT OF THE TAMIL BUDDHIST

**While it may sound peculiar to those who are only used to the concept of a sinhala Buddhist the realiy as denonstrated by Prof sunil Ariyarathe senar teeurer at the Sri Jayawardenepura University, is that there is a vast number of non Sinhalese Buddhist Particularly Tamils.**

**Prof. Ariyaratne observed that there is historical evidence available to prove the existence of Tamil Buddhist both in Tamil Nadu and Sri Lanka. He noted that scriptures were availabie. that seek to establish this link, one that commenced with the visit by Arhath Mahinda to Anuradha pura bearing the message of the Dhamma during Emperor Asoka's period.**

**He added that there wea literary support too - such as out of the five great Tamil epice, two Manimekalai and Kundalakesi being vestly influenced by Buddhism.**

**He noted that it was a misnomer to beliveve the non existence of Tamil Buddhists as for many centuries there have been thousands of Tamils who have rendered yeomen service to foster Buddhism.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதமாற்றத் தடைச்சட்டம்

கட்டாய மதமாற்றம் வரலாற்றில் எப்போது தோன்றியது என்பதனை நாம் ஆராய்வது முதலில் நல்லது. அந்த கட்டாய மதமாற்றம் எந்த சூழ்நிலையில் எழுந்தது என்பதனையும் சற்று நோக்கவேண்டும். வரலாற்றில் மாற்றங்கள் பலவிதத்தில் பலவிதமாக நடைபெற்றக் கொண்டேயிருக்கிறது. காலம் மாறுவதை ஏற்றுக் கொள்ளும் நாம் மாற்றங்களையும் சிந்தித்தேயாக வேண்டும். 'அன்றுபோல் இன்று நாம் இல்லையே' என்பது வரலாறு தரும் பாடம். இதற்கான காரணங்களை எவராலும் மதிப்பீடு செய்ய முடியாது. இம்மாற்றம் வினாடிக்கு வினாடி, நிமிடத்திற்கு நிமிடம், மணித்தியாலத்திலத்திற்கு மணித்தியாலயம், நாளுக்கு நாள் என்று பல நிலையில் நோக்கலாம். எனவே மாற்றம் என்பது மறுக்கமுடியாத நிகழ்வு. மாற்றம் மறுக்க முடியாதது போல மனமாற்றமும் மறுக்க முடியாத ஒன்று. 'அன்று போல் இன்று நாம் இல்லையே' இது ஒரு சினிமாப் பாடலின் ஒரு அடி இப்பாடலில் மனித உணர்வு மனித மனதில் ஏற்பட்ட மனமாற்றத்தையே பிரதிபலிக்கிறது. எனவே மாற்றம் மனமாற்றம் என்பன மறுக்க முடியாத உண்மை மனமாற்றம் உண்டு என்றால் ஏன்? மதமாற்றம் ஏற்படக்கூடாது. மதங்கள் என்பது இறையிணைவுக் கருத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இக்கருத்துக்கள் அவ்வமதத்தின் செயல்பாடுகளால் வெளிப்படுத்தப் படுகிறது. சமூக நிகழ்வுகளில் அவற்றை வெளிப்படுத்தும்போது சமூகமட்டத்தில் கலந்து கொள்ளும் வெவ்வேறு மதக்கருத்துக்களில் உள்ள வேறுபாடுகள் மன மாற்றங்களை ஏற்படுத்துகிறது. அவ் மனமாற்றம் இறுதியில் மதமாற்றமாகி விடுகிறது. ஒரு முகப்பட்ட இறையிணைவுக் கருத்துக்கள் மதங்களில் காணப்படுவதில்லை.

விதியை நம்பும் மதத்தவர்கள் மாற்றங்களை ஒரு போதும் விரும்பமாட்டார்கள். மன்னிப்பு, மீட்பு, மறுவாழ்வு, உண்டு என்று நம்பும் மதத்தவர்கள் மாற்றத்தை விரும்புவர். விதியின் செயற்பாடுகள் கிரகப் பலன்களால் பரிசீலிக்கப்படுகிறது. பாடத்தவன் தான் விதித்தபடி ஆட்டுகிறான். நாங்கள் ஆடுகிறோம் என்பது சில மதத்வர்களின் பொதுவான நம்பிக்கை அன்பின் உடன்படிக்கை மூலம் மனிதனை இழந்த நிலையிலிருந்து (பாவத்திலிருந்து) மீட்கிறார். இதனால் இறைவனின் அன்பு, இரக்கம், கிருபை விளங்குகிறது. இது இன்னொரு மதத்தின் நம்பிக்கை இது போன்ற வேறுபட்ட நம்பிக்கைகள் பல மதங்களில் காணப்படுகிறது. எனவே மதக் கருத்துக்கள் சங்கமிக்கும் இடத்தில் இந்த மனமாற்றம் மதமாற்றமாகிவிடுகிறது. இதனை யாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைசெய்ய முடியுமா?

கட்டாய் மதமாற்றம் என்பது வரலாற்று செயல்பாடாக நிகழ்ந்த ஒரு சூழ்நிலையை நாம் நினைவுபடுத்திக் கொள்ளலாம். அது பக்தி இலக்கியம் எழுந்த காலமாகும். இது கி.பி.600ம் ஆண்டு முதல் 900ம் ஆண்டைக் குறிக்கும். அறநெறி வாழ்க்கையின் வரம்புமீறி வாழ்வியல் நெறி தவறிக் காணபப்பட்ட காலம். வாழ்வியல் நெறி தவறினதால் துறவற சிந்தனைகளும், ஜீவகாருண்ய சிந்தனைகளும் எழுந்தது. அந்த சிந்தனைகள் பௌத்த சமண மத சிந்தனைகளாக மக்களை கவரும் விதத்தில் வளர்ச்சி கண்டது. இதனால் பலர் மனமாற்றம் பெற்று சமணர்களாகவும், பௌத்தர்களாகவும் மதம் மாறினர். இதற்கு சாதகமாக விளங்கியது அவர்களால் ஆக்கப்பட்ட தமிழ்க் காப்பியங்கள். அக்காப்பியங்களில் சிறப்பானது சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன இந்த துறவற சிந்தனைகள் இல்லறத்தின் சிறப்பைக் குறைவுபடச் செய்தது என்று கருதப்பட்டது. வழிபாட்டின் போது யாகபலியாக உயிர்ப்பலி செலுத்துவது தவறு என்று கடிந்துரைக்கப்பட்ட காலம் அது இக்காலத்தில் சைவம், வைஷ்ணவம் ஆகிய மதங்கள் தேய்வடைந்து போனதால் புத்தெழுச்சி காணப்பட வேண்டிய தேவையேற்பட்டது. இக்காலத்தில் சைவமதம் காக்கப்பட உழைத்தவர்கள் நாயன்மார்கள் வைஷ்ணவமதம் காக்கப்பட உழைத்தவர்கள் ஆழ்வார்கள். இவர்களால் சமணம், பௌத்தம் ஆகிய மதங்களைத் தழுவியவர்களை வலுக்கட்டாயமாக அரசர்களின் செல்வாக்குடன் சைவர்களாகவும், வைஷ்ணவர்களாகவும் மதம் மாற்றப்பட்டனர். மதம் மாற விரும்பாதவர்கள் கழுவில் ஏற்றி துன்புறத்தப்பட்டனர் இது வரலாறு சொல்லும் உண்மை

மதம், கலாச்சாரம் என்பன மாற்றமடைய அந்நியர்களின் குடியேற்றமும் காரணமாக இருந்தது இந்தியாவினுள் முதலில் குடிபுகுந்த அந்நியர் ஆரியர்கள். இவர்கள் ஆர்மீனிய மலைத்தொடர் நாகரீத்திலிருந்து வந்தவர்கள். இவர்களது இந்திய வருகையால் வடக்கே ஆரியர்கள் என்றும் மூத்த குடியினராகிய திராவிடர் தெற்கேயும் தள்ளப்பட்டனர். இது வரலாறுதரும் உண்மை. இந்தி[illegible] மதங்கள் பலவாக இருந்தபோதிலும் வடபாரம்பரியம[illegible] வைஷ்ணவமும் தென் பாரம்பரிய மதமாக சைவமும் விளங்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் ஆரியரைத் தொடர்ந்து இஸ்லாமியர் உட்புகுந்து குடியேறினர். இவர்களது முக்கிய தொழில் வியாபாரமாக இருந்தது. ஆனால் அவர்கள் தாம் வாழும் இடங்களில் தம் இனத்துடன் கூடிவாழ்ந்தனர். வழிபாட்டுச் சூழலையும் அதற்கேறற்ப அமைத்துக்கொண்டனர். ஏனைய இந்திய மக்களின் மொழிகளைக் கற்று அவர்களுடன் இணைந்து வாழ்ந்தனர். காலப்போக்கில் அவர்களது நடவடிக்கைகள் நாட்டினைத் துண்டாடும் நிலைக்குள்ளானது. இதனால் இந்தியா பாக்கிஸ்தான் என்றும், பங்களாதேஷ் என்றும் வெவ்வேறு நாடாக பிரிவுபடக் காரணமாயிற்கு. இன்று பாக்கிஸ்தான் பங்காளாதேஷ் என்பன இஸ்லாமிய நாடாக மாற்றம் பெற்றது. அயோத்திப் பிரச்சினை இன்று மதப்பிரச்சினையாக மாறியுள்ளது.

மதமாற்றம் நடைபெற்ற இன்னுமொரு சூழ்நிலையினை நாங்கள் நன்கு அறிந்திருக்கிறோம். அது ஐரேப்பியர் கிழக்கு நாடுகளுக்கு அதாவது இந்தியா இலங்கை போன்ற நாடுகளுக்கு கி. பி. 15ம் நூற்றாண்டளவில் வருகை தந்த காலம். அவர்களின் வருகைக்கு ஒரு பின்னணியிருந்தது. ஆனாலும் அவர்கள் இந்தியா, இலங்கை வருகையினால் அவர்கள் கறுவா, கராம்பு போன்ற வாசனைத்திரவியங் களை பெற்றுக் கொள்ள முடிந்தது. இதன் காரணமாக இவற்றை அதிகமாகப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் இந்தியாவில் கிழக்கிந்திய வர்த்தகக் கொம்பனி ஒன்றினை ஸ்தாபித்தனர். இவ்வர்த்தகத் தொடர்பால் மேலும் பல ஐரேப்பியர்கள் இந்தியாவுக்கு வருகை தந்தனர். காலப்போக்கில் ஐரோப்பியருடன் வந்த கிறிஸ்தவ குருமார் சூழவாழ்ந்த மக்களுக்கு சமூகப் பணியாற்றினர். இதனால் கிறிஸ்தவ மதம் அவர்களிடையே பரவலாயிற்று கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்கள் விசேட சலுகைகளைப் பெற்றுக் கொண்டனர். இதனால் கிறிஸ்தவ மதம் மேலும் அவர்களிடையே வளர்ச்சியடைந்தது. பின்னர். ஐரோப்பியரின் ஆட்சியின்போது கிறிஸ்தவ மதத்தைத் தழுவியர்கள் அரச ஊழியர்களாகவும் பணி புரிந்தனர். இப்படியாக கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்கள் சிலர் உண்மையாகவே மனமாற்றம் காரணமாக மதம்மாறி கிறிஸ்தவர்களானார்கள். வேறு சிலர் சலுகை காரணமாக மதம் மாறியவர்களாகவும் காணப்பட்டனர். இவ்வகையான மதமாற்றங்களை கட்டாய மதமாற்றம் என்ற பட்டியலில் சேர்க்கமுடியுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாயம் என்பது ஒருபோதும் ஒரு சுமூக நிலையைத் தரமாட்டாது. கட்டாயப்படுத்தப்படும் எந்த விடயமும் தீய விளைவுகளையே தரும். அல்லது அதன் எதிர்விளைவுகளைத் தரும். இது நாம் வரலாற்றில் சந்திக்கும் அனுபவமாகும். சட்டங்கள் சிலவிடயங்களை கட்டுப்படுத்தும் பொருட்டு போடப்படுகிறது. ஆனால் அதேவேளையில் அதற்கான எதிர்த்திட்டங்களும் உருவாகிவிடுகிறது. சிந்திக்கும் ஒவ்வொருவனிடமும் இதனைக் காணலாம். எனவே சட்டங்கள் ஒரு நிரந்தரத் தீர்வைத் தரமாட்டாது. சமூக நடவடிக்கைகளில் பல காரியங்கள் தடைபண்ணப்படவேண்டும். அவற்றிற்காகப் போடப்படும் தடைகள் சட்டம் என்று பொருள் பெறுகிறது. இத்தடைகள் மீறப்படும்போது தண்டனை பெறவேண்டி வரும். கட்டாய மதமாற்றதடைச்சட்டம் மீறப்பட்டால் அது தண்டனைக்குரிய குற்றமாகிவிடுகிறது. மனமாற்றம் காரணமாக ஒருவன் மதம் மாறினால் அது தண்டனைக்குரிய குற்றமா? அல்லது சலுகைகள் பெறும் பொருட்டு மதம் மாறினால் அதுவும் தண்டனைக்குரிய குற்றமா?

சமுதாயக் கட்டுக்களாக மூடநம்பிக்கைகள், சாதி வித்தியாசம், ஆணாதிக்கம் போன்ற தீமைகள் மதங்களுக்குள் உண்டு. அதிலிருந்து விடுபட மனிதனுக்கு உரிமை இல்லையா? அது குறித்து சிந்தித்து மனமாற்றம் அடைய மனிதனுக்கு உரிமையில்லையா? சமுதாயக் கட்டுக்களுக்கும், மூடநம்பிக் கைக்கும். சாதி வித்தியாசத்திற்கும் மதம் காரணமாக இருக்கிறது என்றால் கட்டாய மாற்றம் ஒன்று மதத்தில் நிகழத்தான் வேண்டும். புதிய மானிடம், புதிய சமுதாயம், புதிய உலகம் என்பன இன்று மக்களின் எதிர்பார்ப்பாக வேண்டும். இவ் எதிர்பார்ப்புக்கான மனமாற்றத்தினால் ஏற்படும் மதமாற்றம் இன்று நமக்குத் தேவையானதே. கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம் ஏட்டளவில் நின்று விடும். அதன் எதிர் விளைவாக கட்டாய மதமாற்றம் தேவை என்று புலப்படும் காலம் விரைவில் வரும்.

**வண. V.N.தர்மகுலசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைகள் தரும் புதுமைச் செய்தி

இன்றைய உலகில் நடைபெறும் விஞ்ஞான, தொழில்நுட்ப மாற்றங்களின் மத்தியில் அநேக புதுமைகள் நடைபெறுவதை நாம் அவதானிக்கலாம். மனிதன் இன்று உயிரோடு வாழ்வதே மிகப் பெரிய புதுமையாக உள்ளது. திருமறையை நாம் வாசித்துப் பார்க்கும் போது பழைய, புதிய ஏற்பாடுகளில் அநேக புதுமைகள் பொறிக்கப்பட்டுள்ளன. அவைகள் தனிநபர் சார்ந்தவைகளாகவும், சமூகத்தை மையமாகக் கொண்டும் ஆற்றப்பட்டுள்ளன. குறிப்பாக இயேசு வாழ்ந்த நாட்களில் அநேகர் புதுமைகளை ஆற்றினர், எனினும் இயேசுவால் ஆற்றப்பட்ட புதுமைகள் இறையரசை மையமாக கொண்டே ஆற்றப்பட்டுள்ளதோடு அவைகள் பல செய்திகளையும் எமக்குத் தருகின்றன.

இயேசு வாழ்ந்த நாட்களில் மந்திரவாதிகளும் அட்போஸ்லேனியஸ் போன்ற பெரியவர்களும் அநேக புதுமைகளை ஆற்றினர். இவர்கள் தங்கள் சொந்த பெயர் புகழுக்காகவே புதுமைகளைச் செய்தனர். ஆனால் இயேசுவோ புதுமைகள் செய்யும் போது தாம் புதுமைகள் ஆற்றுவதில்லை என்றும் மாறாக கடவுளின் அருளாலே புதுமைகள் ஆற்றப்படுகின்றன. எனவே புதுமைகளால் நன்மை பெறுபவர்கள் கடவுளுக்கே நன்றியைச் செலுத்த வேண்டும், என்றும் அவர்கள் கடவுளில் தங்கி வாழ வேண்டும் என்றும் மக்களுக்குப் போதித்தார். (மாற்கு 5:18-20) இந்நிகழ்வு இன்று எம்மத்தியில் புதுமைகளைச் செய்பவர்களுக்கு பெரிதான சவாலாக அமைகின்றது.

பல் சமயச் சூழலில் வாழ்ந்த இயேசு புதுமைகளை மதம் மாற்றும் கருவியாகப் பாவிக்கவில்லை. உதாரணமாக லூக்கா 7:1-12 வரை உள்ள பகுதியில் நூற்றுவத் தலைவனின் வேலைக்காரன் குணமடைந்த போது இயேசு அவரை அவனுடைய உரோம மதத்தில் இருந்து யூத மதத்தைப் பின்பற்றுமாறு அழைக்கவில்லை. மேலும் கானானியப் பெண்ணின் மகளுக்கு இருந்த வியாதியை இயேசு குணமாக்கிய பின்னர் அப்பெண்ணை மதம் மாறுமாறு உற்சாகப்படுத்தவில்லை. (மாற்கு 7:24-30) மேலும் இயேசுவின் புதுமையினால் கவரப்பட்ட மக்கள் அவரைப் பின்பற்ற விரும்பிய போது அவர் அவர்களை ஊக்கப்படுத்தாமல் அவர்கள் வீடுகளுக்கே அவர்களை அனுப்பி விட்டார். (மாற்கு 5:18-20) எனவே இன்று நாம் வாழும் பல் சமயச் சூழலில் புதுமைகளை நாம் மதம்மாற்றும் கருவியாக பாவிக்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஏற்பாட்டில் இயேசுவால் ஆற்றப்பட்ட புதுமைகள் அவரை தெய்வமாக காட்டுவதற்கோ அல்லது மாயவித்தைக்காரராகக் காட்டுவதற்கோ எழுதப்பட்டவைகள் அல்ல. மாறாக இயேசு மனிதர்கள் மீது இரக்கம் உள்ளவராக இருக்கின்றார். என்பதை காட்டுவதற்காகவே எழுதப்பட்டுள்ளது. உதாரணமாக - மாற்கு 1:40-45 வரையுள்ள பகுதியில் இயேசு தொழுநோயாளியை குணமாக்கிய புதுமை வர்ணிக்கப்பட்டுள்ளது. இங்கு இயேசு தொழுநோயாளியை அரவணைத்தார் என்பதே மிகப் பெரிய புதுமையாகும். அன்று சமூகத்தினால் ஒதுக்கப்பட்ட அன்புக்கு ஏங்கிக் கொண்டு இருந்த இந்த மக்களை இயேசு ஏற்றுக் கொண்டார் என்பதே மிகப் பெரிய புதுமையாகும். மேலும், மாற்கு 4:35-41 வரையுள்ள பகுதியில் கடலின் மீதும், காற்றின் மீதும் இயேசுவுக்கு இருந்த அதிகாரம் வர்ணிக்கப் பட்டுள்ளது. இங்கு சீடர்கள் ஒரு கரையில் இருந்து மறுகரைக்கு செல்ல ஆயத்தமாகின்றனர். அதாவது ஒரு பகுதி மக்களிடம் இருந்து மறுபகுதி மக்களை நோக்கி நகர ஆயத்தம் ஆகின்றனர். எனவே இங்கு சீடர்கள் ஒரு பகுதி மக்களிடம் இருந்து இன்னுமொரு பகுதி மக்களுடன் பழக ஆயத்தம் அற்ற நிலையில் உள்ளத்திலே போராடிக்கொண்டு இருந்தனர். எனவே உள்ளக் குமுறலேயே இயேசு இங்கு அடக்குவதைப் பார்க்கின்றோம். மறைமுகமாக சீடர்களை நோக்கி நீங்கள் உங்களைப் போல மற்றவர்களை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக உள்ளீர்களா? என சவால் விடுகின்றார். மேலும் மாற்கு 8:1-13 வரையுள்ள பகுதியில் இயேசு பகிர்ந்து கொள்ள முடியாதபடி மக்கள் மனதில் காணப்பட்ட கடினத் தன்மையை அகற்றுகின்றார். மேலும் இயேசு கன்னியின் வயிற்றிலே உதித்தார் என்பதற்காக நாம் அவரை விசுவாசிக்கக் கூடாது. மாறாக அன்று ஆண் ஆதிக்கம் நிறைந்த சமூகத்தில் ஆண்களின் உதவியின்றியும் பெண்கள் கருத்தரிக்க முடியும். கடவுள் ஆண்களிலும் பார்க்க வல்லமை நிறைந்தவர் என்பதை வலியுறுத்துவதற்காகவே அவ்வாறு செய்தார். எனவே இயேசு புதுமைகள் ஆற்றிய படியினால் அவர் தெய்வம் அல்ல, மாறாக புதுமைகளின் ஊடாக இறையரசின் விழுமியங்களையும், மனிதனின் பெறுமதியையும் உலகிற்குக் காட்டியதன் மூலமே அவர் தெய்வம் ஆக்கப்பட்டார்.

புதுமைகள் பெற விரும்பிய அனைவரிடமும் இயேசு பற்றுறுதியை எதிர்பார்த்ததாலும், பற்றுறுதி புதுமைகளுக்கு தடையாக ஒரு போதும் அமையவில்லை. கடவுள் மனிதனுக்கு புதுமைகளைச் செய்வது அவனிடம் காணப்படும் நம்பிக்கையிலோ அல்லது வேறு நற்குணங்களினாலோ அல்ல, மாறாக மனிதனின் தகுதியற்ற நிலையிலேயே கடவுளின் அருள் அவன் மீது பொழிகின்றது. (மாற்கு 9:14-24) எனவே மாட்டின் லூதர் கூறுவது போன்று ஒருவன் நற்கிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவதினால் நல்லவன் ஆகிவிட முடியாது, மாறாக நல்லவனாக இருப்பதனாலேயே நற்கிரியை செய்கிறான். எனவே கடவுள் மனிதனின் தகுதியற்ற நிலையிலேயே புதுமைகள் கடவுள் செய்கின்றார். மாறாக தகுதியான நிலையில் அல்ல.

இயேசுவின் மரணமும் ஒரு புதுமையாகவே கணிக்கப் படுகின்றது. அவர் வாழும் போது ஆற்றிய புதுமைகளைவிட அவர் மரணத்தின் போது வெளிப்பட்ட புதுமைகளே மேலானதாகக் காணப்படுகின்றது. மரணத்தில் அவர் காட்டிய பொறுமை அங்குள்ள மக்களையே திகைக்க வைத்தது. அதன் விளைவாக அங்கு நின்ற உரோம நூற்றுவத்தலைவன் இயேசுவை கடவுளின் மகன் என்று அறிக்கையிடுகின்றார். இயேசு வாழும் போதும் புதுமைகளைச் செய்யும் போதும் அவருக்குக் கிடைக்காத அறிக்கை அவரின் மரணத்தில் வெளிப்படுகின்றது என்றார். அவரின் வாழ்வை விட மரணம் அர்த்தமுள்ள ஒரு புதுமையாகக் கணிக்கப்படுகின்றது. எனவே இங்கு வெளிப்படும் செய்தி என்ன வெனில் மரணத்திலும் நாம் வாழலாம் என்பதாகும்.

எனவே மேற்கூறப்பட்ட உதராணங்களில் இருந்து இயேசு புதுமைகள் மூலம் கடவுளை மகிமைப்படுத்தினார். மேலும் புதுமைகளை தனது சொந்தப் பெயர் புகழுக்காக பயன்படுத்தா மலும், மதம் மாற்றும் கருவியாக உபயோகிக்காமலும், தெய் வீகத்தை உறுதிப்படுத்தும் அடையாளமாகப் பாவிக்காமலும். மனிதத் தன்மையை வலியுறுத்தவும், இறையரசைக் கட்டியெழுப்பவும் கருவியாக அவைகளைப் பாவித்தார். எனவே நாமும் இவைகளைக் கருத்திற் கொண்டு புதுமைகள் ஆற்றவும், புதுமைகளைப் புரிந்து கொள்ளவும் கடவுள் எம்மை வழிநடத்துவாராக.

வண.அருளம்பலம் ஸ்ரீபன்

**Peace**

*No Peace among the nation*
*without peace among the Religions.*
*No peace among the religiona*
*without dialogue among the Religions.*
*No dialogue among the religiona*
*without investigation of the foundation of the Religions.*

**- Hans Kung -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சமூகத்தில் சிறார்கள் – அவர்களை அணுகும் முறை

சிறுவர் எனப்படுவோர் மலர்வதற்குத் தயாராக இருக்கும் மொட்டுக்கு ஒப்பிடக்கூடியவராவர். அந்தளவிற்கு அவர்களது உணர்வுகள் மிருதுவானவை, அற்புதமானவை. சிறுவர்களது விருப்புகள், வெறுப்புகள் அவர்களது சிந்தனைகள், கற்பனைகள் எல்லாம் மிகவும் நுணுக்கத்துடன் அணுகப்பட வேண்டியவையாகும். ஒரு பண்பாடான சமூகத்தில் கண்ணென மதிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட வேண்டியவர்கள் சிறுவர்களேயாவர். அவர்களது உடல், உளவளர்ச்சியில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மதகுருமார்கள் என சமூகத்தில் பலதரப்பட்டவர்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்கெடுத்துக் கொள்ளுவது இன்றியமையாததாகும். அது மட்டுமன்றி சமூக கட்டமைப்பில் உள்ள அனைவரும் சிறுவர்கள் விடயத்தில் கரிசனையோடு இருக்கவேண்டும் என்ற கடமைப்பாடு தற்போதைய நாட்களில் ஏற்பட்டு வருகின்றது.

எதிர்கால உலகம் இன்றைய சிறார்களின் கைகளிலே தங்கி உள்ளது என்பது மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மையாகும். இவ்வாறு முக்கியத்துவம் கொடுக்கப்படும் சிறார்களின் இன்றைய நிலையை எடுத்து நோக்குவோமாயின் அவர்களது அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் தொழிலாளிகளாகவும், போராளிகளாகவும், தெருவோரங்களை தம் வாழ்விடங்களாகக் கொண்டவர்களாகவும், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளானவராகவும் காணப்படுகின்றனர். தற்போது நாம் வாழ்கின்ற சமூகத்தில் சிறுவர்களது உணர்வுகள் மதிக்கப்படாது அவர்களது அடிப்படை உரிமைகள் வெளிப்படையாகவோ மீறப்படுகின்றன. சுதந்திரப்பறவைகளாக இருக்க வேண்டிய இப்பருவத்தில் சுமை தாங்கிகளாக மாறிவிடுகின்றனர். நாளைய பூக்களாக மலரவேண்டிய மொட்டுக்கள் போன்ற சிறுவர்கள் துஷ்பிரயோகங்கள் மூலம் கசக்கப்பட்டு சீரழிக்கப்படுகின்றனர். குறிப்பாக இந்தியாவில் சிறுவர்களை பட்டாசு வெடிமருந்து தயாரித்து, தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்துதல் போன்றவற்றில் ஈடுபடுத்துதல் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

குறிப்பாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலேயே பெரும்பாலும் சிறுவர் உரிமைகள் மறுக்கப்பட்டு சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள் மேலோங்கி நிற்கின்றன. எனினும் அபிவிருந்தி அடைந்த நாடுகளிலும் சிறுவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். எடுத்துக்காட்டாக பிறேசில் "நாட்டில் சிறுவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைத் தோட்டங்களில் வேலை செய்கின்றார்கள். எகிப்தில் "கந்தைத் துணி மற்றும் கழிவுகளைச் சேர்க்கிறார்கள்", "சூடானில்" பஞ்சு அறுவடை செய்கிறார்கள்.

இவ்வாறு சிறுவர்கள் மீது ஏற்படுத்தப்படும் துஷ்பிரயோகங்கள் தடுத்து நிறுத்தப் படவேண்டுமெனில் சமூகத்தின் எல்லாத்தரப் பிரிவினரிடையேயும் சிறுவர் உரிமைகள் தொடர்பான தெளிவான விளக்கம் கொடுக்கப்பட வேண்டும்.

1954ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் சிறுவர் உரிமைப் பிரகடனம் உருவாக்கப்பட்டது. மேலும் சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் நோக்குடன் 1989ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் சிறுவர் உரிமைகள் பற்றிய "சமவாயம்" உருவாக்கப்பட்டது. இச்சமவாயமானது சிறுவர்களுக்கு இருக்க வேண்டிய உரிமைகள் பற்றி வலியுறுத்தி நிற்கின்றது.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயமானது 54 உறுப்புரைகளைக் கொண்டுள்ளது. அந்த உறுப்புரைகளில் 19ம் உறுப்புரை துஷ் பிரயோகம் புறக்கணிப்பிலிருந்து பாதுகாப்பு எனும் உரிமையை வலியுறுத்தி நிற்கிறது. இந்த உறுப்புரையானது எல்லா விதமான உடலியல் உளவியல் ரீதியான காயங்களிலிருந்தும் சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும், என்றும், அத்துடன் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, பொருளாதார ரீதியான சுரண்டல் போன்றனவற்றிலிருந்து சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உரிமையை வலியுறுத்தி நிற்கின்றது.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது ஒரு சமூகத்தின் வழக்கிலுள்ள நடைமுறைகளுக்கு மாறாக அச்சமூகத்தின் சிறுவர்கள் நடத்தப்படுவதே சிறுவர் துஷ்பிரயோகமாகும்.

**சிறுவர் துஷ்பிரயோகத்தின் வகைகள்:**

இலங்கையில் இடம் பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகளவில் உடலியல் ரீதியான துஷ்பிரயோகங்களாகவே அமைகின்றன. இந்த வகையில் இடம் பெறும் உடலியல் ரீதியான துஷ் பிரயோகங்களாக பின்வருவன கருதப்படுகின்றன.

** சிறுவர்களை அடித்து துன்புறுத்தல்
** சிறுவர்களது உடலில் காயங்களை ஏற்படுத்துதல்,
** சிறுவர்களது அடிப்படைத் தேவையான உணவு, உறையுள், உடை, மருந்துவக்கவனிப்பு போன்றவற்றை வழங்காமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

** சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்
** சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்தல்
** 15 வயதுக்குப்பட்ட சிறுவர்களை போராட்டத்தில் ஈடுபடுத்துதல்
** சிறுவர்களை அவசியமின்றி அதட்டுதல் கோபமூட்டுதல்
** பெரியவர்கள் தம் ஆத்திரங்களைத் தீத்துக் கொள்ள சிறுவர்களை வதைத்தல்
** சிறுவர்களை குற்றம் செய்வதற்கு அல்லது விபத்தில் சிக்குவதற்கு வழி ஏற்படுத்துதல்
** பிள்ளைகளை நம்பிக்கை இழக்கச் செய்தல்
** பிள்ளைகளது கருத்துக்களுக்கு மதிப்பளிக்காது விடுதல்
** பிள்ளைகள் எதிர்பார்க்கும் அன்பையும் ஆதரவையும் வழங்காமை.

**சிறுவர் துஷ்பிரயோகத்தின் விளைவுகள்**

சிறுவர் துஷ்பிரயோகமானது பாரிய அளவில் சிறுவர்களுக்கு உடல், உள ரீதியான பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஆழமான மன வடுக்களையும் மனத் தாக்கங்களையும் உருவாக்குகிறது. சிறுவர்களது வளமான எதிர்காலம் சீரழிக்கப்படுகிறது. துஷ்பிரயோகங்களுக்கு ஆளான சிறுவர்கள் எதிர்காலத்தில் தவறான முறையில் தம் வாழ்வை இட்டுச் செல்ல வழி ஏற்படுகின்றது. துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும் சிறுமிகள் எதிர்காலத்தில் தம் குடும்ப வாழ்க்கையில் உளரீதியான பாதிப்புக்களை சந்திக்க நேரிடுகிறது. மேலும் இவ்வகையில் துஷ்பிர யோகங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் எதிர்காலத்தில் போதை வஸ்துக்கும் மதுப் பாவனைக்கும் புகைத்தல் பழக்கத்துக்கும் அடிமையாகக் கூடிய ஆபத்து ஏற்படுகின்றது.

எனவே சிறுவர்களது உரிமைகள் மீறப்பட்டு உருவாக்கப் படும் துஷ்பிரயோகங்களை எதிர்க்கும் செயற்பாடுகள் ஒவ்வொரு நாட்டிலும் சட்ட ரீதியாக உருவாக்கப்படுவது கட்டாய தேவையாகும். சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதால் துஷ்பிரயோகத்தை குறைப்பதற்கு சற்றேனும் வழியுண்டாகும். இந்த வகையில் எமது நாட்டின் அண்மைக்காலங்களில் சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் நலன் என்பன மிகவும் காத்திரமான முறையில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த வகையில் மாவட்ட ரீதியாக சிறுவர் பாதுகாப்புக் குழு, சிறுவர் பாதுகாப்பு நிதியம், நீதிமன்றங்களில் சிறுவர்களுக்கு என தனியான பிரிவு போன்ற அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு சிறுவர்கள் தொடர்பான அனைத்து விடயங்களிலும் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் சிறுவர் உரிமைகள் மீறல் தொடர்பாக மக்களை விழிப்படையச் செய்வது மிகமிக அவசியம். இந்த வகையில் தொலைக் காட்சி, வானொலி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன குறிப்பிட்ட விடயம் சார்பாக மக்களை விளிப்படையைச் செய்வதில் பெரும் பங்கு வகித்தல் வேண்டும். எவ்வகையில் எல்லாம் சிறுவர் உரிமை மீறல் தொடர்பான விளக்கங்கள், விபரங்கள், தகவல்கள் மக்களைச் சென்றடைய முடிவுமோ அத்தகையே வழி முறைகள் எல்லாம் இவ்விடயத்தில் விடாப்பிடியாக கையாள வேண்டும்.

இவ்விதம் சிறுவர் உரிமைகள் மீறப்படுவது துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்படுவது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்படும் போதும், சிறுவர் நலனில் அக்கறை கொள்ளும் பொது ஸ்தாபனங்கள் மனித நேய அமைப்புக்கள் யாவும் இவ்விடயத்தில் சரிசனை கொண்டு செயற்படும் போது தான் சிறுவர்களது எதிர்காலம் சிறப்புற்று சுபீட்சம் நிறைந்ததாக மாறும் என்பது நிச்சயம்

**திருமதி நந்தினி பத்மதயாளன்**

## "SPEAK TO ME, LORD"

They speak beautiful words, if you keep silent, they can't kindle the heart.
They communicate the letter, but you explain its meaning.
They announce mysteries, but it is you who reveal the sense of what has been said.
They proclaim commandments, you help us to observe them.
They point out the way, but you give the strength to walk on it.
They reach us from outside, but you instruct and enlighten our hearts.
They irrigate the soil, but you give fertility.
They call out words, but it is you who help us to understand them while we listen.
Therefore let not Moses speak to me, but you, lord my God, eternal truth. Let it not happen to me, that admonished from without, but not kindled within, I die without fruit - May I not come to condemnation for having heard your word – but failed to put it into practice; having Known it but failed to love it; having believed it but failed to live it.
"Speak therefore, O Lord, your servant is listening" (I kings 3;10)
"For you have thee words of eternal life" (Jn6:69)

Speak to me that I May feel comfort in my soul and that I may improve my whole life, to your praise and glory and eternal honour-

**(Selected)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்கள் சுகம் பெற வேண்டும்

சமூக மாற்றத்தில், இன்று பல புதுமைகள் நிகழ்கின்றது. எல்லாமே புதிய வடிவமைப்பாக புதுப் பொலிவுடன் திகழ்கின்றது. பட்டடங்கள் - நாம் பாவிக்கும் பொருட்கள் அத்தனையும் புதியவை. இவற்றுக்குள்ள வரவேற்பு. அதை அனுபவிப்பதில் உள்ள சுகம், அதனால் வரும் அவலங்களும் நீளும்.

நாளொரு வண்ணம் புதிய கண்டுபிடிப்புகள் வருகின்றது. அவற்றுள் மனிதன் மட்டும் மாற்றம் எதுவும் காணாத பழைய வடிவமைப்பாக நடமாடுகின்றான். மனிதன் இன்று வேண்டாப் பொருளாக மாறிவிட்டான். ஏனெனில் அவன் செய்யும் வேலைகளை இன்று இயந்திரங்கள் செய்வதினால், மனிதன் பெறுமதி இழந்து போய் விட்டான்.

பிள்ளைகளுக்கு பெற்றோர் வேண்டாப் பொருள்களாக காணப்படுகின்றார்கள் ஏனெனின் அவர்களினால் பயன்எதுவும் இல்லை. இதனால் பெற்றோர் ஊனமுற்றோர் வேண்டாப் பொருட்கள். பயன்படடாத பொருட்களை பாதுகாக்க வேண்டிய தேவைஇல்லை. அதனை பாதுகாப்பதனால் ஏற்படும் நன்மை என்ன? இவ்வாறு மனிதர்கள் கருதுவதினால் தான் முதுமைகள் அநாதை விடுதிகளில் தேங்கிப் போய் இருக்கின்றார்கள். ஒரு பொருள் தேவைப்படும் போது அதனை அனுபவிக்க எடுக்கும் முயற்சிகள் அதிகம். சக மனிதர்கள் தேவைப்படும் போது கூட அவர்களிடம் இருந்து பயன் அடைய எத்தனை போலி வேடங்களை அணிந்து காரியத்தை கச்சிதமாக முடிக்கின்றார்கள். காரியம் முடிந்ததும் அவரை புறம்தள்ளிக் கொள்வது மிகவும் கீழ்தரமானது.

தொழிநுட்பம் நல்ல மனிதர்களை உருவாக்கவில்லை. மாறாக மனித உறவை சிதைக்கும் சூழலைத்தான் உருவாக்கித் தந்திருக்கின்றது.

**ஆரம்ப காலத்தில் மனிதம் எங்கே?**

தொழில் நுட்பம் வளர்வதற்கு முன்பு, மனித உழைப்பு மேலோங்கி இருந்தது. அந்தச் சூழலிலும் மனிதர்கள் மதிப்புக் குரியவர்களாக கருதப்படவில்லை. ஏனெனில் சாதி அடிப்படையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்கள் வகுக்குப்பட்டது. உயர் சாதியினருக்கு, குறைந்த சாதியினர் தொழில் புரிந்தரினால் மதிக்கப்படவில்லை. இன்று அந்தத் தொழிலைப் புரியும் இயந்திரங்கள் மதிப்புக்குரியதாக பெறுமதிமிக்கதாக காணப்படுகின்றது.

அதாவது சலவைத் தொழிலாளியின் உழைப்பு பயன்பெறப்பட்டது. ஆனால் அவன் மதிப்புபெறவில்லை. இன்று அவன் செய்யும் தொழிலை "வோசிங் மிசின்" செய்கின்றது. அது பெறுகின்ற மதிப்பு அதிகம் இது ஏன்?............

இவ்வாறு தான் ஒவ்வொரு சாதிய குழுமத்தின் உழைப்பும், அடுத்தவர்களுக்கு பயனடைந்தது. ஆனால் அவர்கள் மதிப்புப் பெறவில்லை. சமூக மாற்றத்தில் இயந்திரங்கள் அநேக பணியாற்றுகின்றது. அவை மதிப்பும் பெறுகின்ற ஏன்? என்று சிந்திக்க தூண்டுகின்றது?

இயந்திரங்கள் பணத்தினால் முதலீடு செய்யப்பட்டவை. அவற்றை பாதுகாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. பழுதுபட்டால் திருத்திக் கொள்ள வேண்டும். அல்லது புதிதாக வாங்க வேண்டும். இத்தகையை ஏக்கத்தினால் அதனை பாதுகாத்துக் கொள்ளுகின்றனர். ஆனால் மனிதர்களை முதலீடு செய்ய வேண்டியதில்லை. அவர்கள் பழுதுபட்டால் திருத்த வேண்டியதில்லை. இதனால் மதிப்பிழந்து போனார்கள் போலும், எனினும் ஆரம்பத்தில் கூட்டுழைப்பின் முக்கியத்துவம் உணரப்பட்டது. வயலில் வேலை செய்யும் போது வீடு வெய்யும் போது உறவாக ஒன்று சேர்ந்து ஆடி - பாடிகளைப்பின்றி உழைத்தார்கள்.

சாதியம் என்ற ரீதியில் பாகுபாடுகள் - அடக்குமுறைகள் இருப்பினும் தமது சாதிய குழுமம் சார்ந்த மூத்தோரை மதித்தான். உறவினர் மீது பாசம் கொண்டிருந்தான். ஒருவருக்கொருவர் உதவி வாழ்ந்தான். இது சிறப்புக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கண்டுபிடிப்புக்கள் கூட்டுழைப்பினை மறுகின்றது. எதையும் தனியே செய்யலாம் என்ற சிந்தனைகளை உருவாக்கி விட்டது. நவீன கண்டுபிடிப்புக்கள் மகிழ்வை கொடுக்காது, கொடுப்பது போன்ற பிரம்மை இருக்குமே தவிர, மகிழ்வை கொடுக்க முடியாது. மனித உறவுகள் தான் மகிழ்வை கொடுக்க கூடியது இதுதான் உண்மையான உயர் அர்த்தம் கொண்ட மகிழ்வாக இருக்க முடியும். இது சாதியத்தை வலியுறுத்தி நிற்பது அல்ல, மாறாக உயர் மனிதத்தை மதித்து நேசிக்கும், போது மகிழ்வு மலரும்.

**விதைத்ததை அறுக்கின்றோம்.**

தொலைக்காட்சிகள் இன்று தொல்லைக் காட்சிகளாக மாறிவிட்டது. நோயிலாக காணப்பட்ட வீடுகள், திட்டராக மாறி விட்டது. நாள் முழுவதும் தொலைக் காட்சி நாடகங்கள் - சினிமா என்று பார்க்கின்றார்கள். இவையெல்லாம் நவீன வளர்ச்சி என்ற கருத்தும் இதில் அதிக நேரம் செலவு செய்யாவிட்டால் நாம் வளரவில்லை என்ற போக்கும். அடிப்படை மனப்பான்மைகளாக இருக்கின்றது. தொழில் நுட்பம் இதைத்தான் மனிதர்களிடம் விதைத்திருக்கின்றது. அதன் அறுவடையாக மந்தப்புத்தியையும் - உறவில் விரிசலையும் வரவழைத்துக் கொண்டோம்.

இன்று வாசிப்புத்திறன் அற்றுப் போய் விட்டது. அதனால் மொழிவளம் குறைந்து போய் விட்டது. புத்தியும் மந்தடைந்து விட்டது. மனித உறவில் விரிசல் அதனால் தனிமை மனதில் விரக்தி அத்தனையும் சமூகத்தில் இருந்து விலகிச் செல்வதினால் ஏற்படும் பரிசு.

ஒரு குழந்தை பிறந்து வளர்வதும், சமூக விழுமியங்களையும், நியமங்களையும், கற்பதும் குடும்பத்தில் இந்தக் குடும்பத்தில் இன்று நிறைவு இல்லையே,இதனால் குழந்தை எப்படி நிறைவு பெற்றதாக உருவாக முடியும்.

பெற்றோர் - பிள்ளை சகோதரம் என்ற பாச உணர்வுகள் மறைந்து போய் விட்டது. எல்லாமே பொருள் சார்ந்த நுகர்வு கலாச்சாரமயமாக மாறிவிட்டது. எமது சமூகப் புலத்திற்கு இதை யார் கொடுத்தது. தொழில் நுட்பம் கொடுத்தது. அறிவின் வளர்ச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற போக்கில் தொழில் நுட்பம் தேவை. ஆனால் மனிதத்தை சிதைக்கும் போக்கு தேவையில்லை.

## படைப்புக்கு மதிப்பு, படைப்பாளிக்கு...?

நாம் தேவை என்ற உணர்வு தோன்றும் போது மகிழ்வை அனுபவிக்கின்றோம். தேவையற்ற பொருள் என உணரும் போது விரக்தி கொள்கின்றோம். நோயாளி அதி நோயாளியாகவும், முதுமை மனவிரக்தியுடனும் வாழ இது தான் காரணம்.

எல்லா மனிதர்களும் தேவையானவர்கள். அவர்களிடம் ஏதோ ஒரு சக்தி உறைந்திருக்கின்றது. அதனை அவர்கள் இனம் காணவும், நாம் இனம் கண்டு கொள்ளவும் வேண்டும். மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒரு படைப்பாளன். அவன் தன் அறிவு - திறன் சக்தி ஆகியவற்றுக்கு ஏற்ப ஏதோ ஒன்றை உருவாக்கின்றான். அவன் தெய்வம், இறை படைப்பை மேலும் வளப்படுத்துபவன். அந்த படைப்பில் இருந்து புதிது புனைதலை மேற் கொள்பவன். அவனை மதித்து அன்பு செய்யவேண்டும். இதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

படைப்பாளனை வெறுத்து, அவன் படைப்பை அனுபவிப்பவன் ஒரு போக்கிரி, சமூகத்தை துண்டு துண்டாக உடைப்பவன். இதனால் சமூக சமநிலை கெட்டுப் போகின்றது. ஆகவே படைப்பாளன் போற்றுதற்குரியவன். அவனை மதித்தவன் தான் இறைவனை வழிபட தகுதி பெற்றவன். ஆன்மீகத்தின் உச்சநிலையும் இதுவாகத் தான் இருக்க முடியும். மனங்கள் சுகம் பெற மனித நேசிப்பு பெருக வேண்டும். சிந்திப்போம்.

**ஆக்கம்: வீ. பி. தனேந்திரா,**
**சமூகவியல் சிறப்புக்கலை,**
**யாழ் பல்கலைகழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய ஏற்பாட்டில் இறைவனின் பண்புகள்

பழைய ஏற்பாட்டில் ஆரம்பத்தில் "யாவே" தாமே இஸ்ரவேலின் கடவுள் அவர் சிருஷ்டிகளுக்கும் சிருஷ்டிப்பிற்கும் கடவுளாயிருக்கிறார் என ஆமோஸ் 5:8ம் வசனமும் ஏசா 40:12 வசனமும் கூறுகின்றன. இதனை எரே 10:7-10, ஏசா 10:5 'யாவே' சிறப்பாக மானிடர்க்கும், ஜாதிகளுக்கும், வரலாற்றிற்கும் இறைவன் எனக் கூறுகின்றன. 'யாவே' ஒருவரே கடவுள். அவரேயன்றிக் கடவுள் வேறொருவருமில்லை. அவர் நிலையற்றவர் அல்லர். அவர் எல்லாவற்றிற்கும் நிலையுள்ளவரும், திடமுள்ளவருமாய் இருக்கின்றார் எனவும் ஏசா 20:40 அதிகாரங்கள் கூறுகின்றன.

மேலும் இஸ்ரவேலரின் கடவுளாகிய "யாவே" பற்றித் தீர்க்கதரிகள் பின்வருமாறு போதித்தனர். "கர்த்தரின் நாள்" யாவேயின் நியாயத்தீர்ப்பு நாள். அதாவது "யாவே" மற்ற ஜாதிகளையும் இஸ்ரவேலையும் நியாயத்தீர்ப்பார். உலகம் பொல்லாங்கினாலும் தீமையினாலும் நிறைந்திருப்பதால் 'யாவே' உலக நீதியையும் அகில உலகத்தின் போக்கினையும் அழித்து விடுவார் என பழையேற்பாடு கூறுவதால் இறையியலில் 'யாவே' யின் முக்கியத்துவத்தைக் காண முடிகிறது.

அடுத்துப் பழைய ஏற்பாட்டில் பலியிடும் வழக்கம் இருந்தது. ஏசாயாவுக்கு 'யாவே'யின் அழைப்பு வந்த போது அவர் பலியிடும் நேரத்தில் ஆலயத்தில் இருந்தார். ஏசா 6:1-6. எசேக்கியேல், சனங்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பும் போது ஆலயத்தைப் புதிதாகக் கட்டி பலிகளைத் திரும்பவும் ஏற்படுத்துவார்கள் என்று எதிர்பாரத்தவராய் இருந்தார். எசே 40:48.

ஆனால் இறுதியில் தீர்க்கதரிசிகள் பலியிடுவதைக் கண்டித்தார்கள் என்றே தெரிகிறது. நீதியாய் நடவாமல் பலி செலுத்துவதில் பயனில்லை என்றே அவர்கள் கூறினார்கள். ஆமோஸ் 5:21-25. பழைய ஏற்பாட்டு இறையியற் கருத்தில் தீர்க்க தரிசிகள் பலியில் குறையை அறிந்து உணர்ந்தார்கள். அவர்கள் பலியிடுவதிலும் பார்க்க நீதியாய் இருப்பதே முக்கியம் என்பதை அறிந்தனர். மேலும் விக்கிரக ஆராதனைக்கும், பலியிடுவதற்கும் தொடர்புள்ளதால் தீர்க்கதரிசிகள் விக்கிரக ஆராதனையைக் கண்டித்த போது பலியிடுதலையும் கண்டித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் ஓர் 'ஆண்' அல்ல என்பதைப் பழைய ஏற்பாடு திட்டமாகக் கூறுகிறது. ஆனால் கடவுள் ஒரு நண்பன் போல மோசேயுடன் பேசுவதைக் காண்கிறோம். இஸ்ரவேல் மக்கள் தமக்கென ஒரு கடவுளை வழிபட்டனர். அவர்கள் கானான் தேசத்துக்கு வந்த போது அங்கு வழிபட்ட "பொலிவுத் தெய்வங்கள்" பலவற்றை அவர்கள் கண்டனர். அத்தெய்வ வணக்கமே பாகால் வணக்கமாகும். இஸ்ரவேலர், கடவுள் "யாவேக்கு" எதிராகப் பாகால் தெய்வம் வணங்கப்பட்டது. 1 இரா 18:17 - 40 அங்கு ஏற்பட்ட போராட்டத்தின் பயனாகவே ஏக தெய்வ வணக்கம் ஏற்பட்டது. ஒரே கடவுளைத் தவிர வேறு கடவுளர் இல்லை என்பதை முதலிலே திட்டமாகக் கூறியவர் ஏசாயாவாகும். ஏசாயா 44:8

இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டே பின்னர் வந்த புதிய ஏற்பாடு எழுத்தாளரும் ஓரே கடவுள் கொள்கையைக் கொண்டு இருந்தனர் எனலாம். மாற் 12:32. கிறிஸ்தவ நம்பிக்கையின்படி "கடவுள் காலத்தைக் கடந்தவர், அநாதியானவர், மாம்சமானவரல்லர் அவர் ஆவியானவர், கடவுள் பிதாவாயிருக்கிறார். கடவுளைப் 'பிதா' எனப் பழைய ஏற்பாடு பல இடங்களில் அழைக்கிறது, கடவுள் அன்பானவர், ஒசியா தீர்க்கதரிசி காட்டுவது போல கடவுளின் அன்பு இஸ்ரவேலின் பாவத்தின் மத்தியிலும் காட்டப்படும் அன்பாகும். இஸ்ரவேலர் கீழ்ப்படியாது போனபோதும் "நான் உன்னை எப்படிக் கைவிடுவேன் இஸ்ரவேலே நான் எப்படி ஒப்புக் கொடுப்பேன்..... எனக் கடவுள் கதறி நிற்கும் நிலையை அவரது அன்பு எடுத்துக் காட்டுகிறது.

எனவே பழைய ஏற்பாட்டில் கடவுள் பல பண்புகளைக் கொண்டவராக காட்டப்படுவதுடன் புதிய ஏற்பாட்டிலும் இதே பண்பு களைக் காணலாம்.

**திருமதி. கிருபா பாலசிங்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்மணி அமுது அவர்களுக்கு பாப்பரசரால் அளிக்கப்பட்ட

# "செவாலியர்" பட்டம்

பரிசுத்த பாப்பரசர் அவர்கள், ஒரு தமிழ் மகனாருக்கு - அவர் தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கம் - சமூகத்துக்கும், சமயத்துக்கும் ஆற்றிய தலைசிறந்த பணிகளுக்காகச் "செவாலியர்" என்ற மகத்தான பட்டத்தையும் விருதையும் வழங்கி வாழ்த்தியுள்ளார். தமிழ் உலகுக்குப் பெருமகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியது.

கிறிஸ்தவ சமய வரலாற்றில் இவ்வாறு தமிழ் புலவர் ஒருவரைப் பாராட்டியிருப்பது இதுவே முதல் முறையாகும். நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இளவாலையில் ஆசிரியப் பணியாற்றிய வருமாகிய புலவர் பணி அமுது அவர்களுக்கே இப்பட்டம் வழங்கப பட்டது. இந்த "செவாலியர்" பட்டமானது, பிரித்தானிய மகாராணி அளிக்கும் "சேர்" என்னும் உயர்தர பட்டத்திலும் மகத்தானது. இதனை "Papal Knighthood " (செவாலியர்) என அழைப்பர்.

சமயத்துக்கும் நாட்டுக்கும், சமுதாயத்துக்கும் கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு சிலர் செய்து வரும் சீரிய சேவைகளைச் சீர்தூக்கிப் பார்த்து திருச்சபைத் தலைவரான பாப்பரசர் மிகவும் அரிதாக இத்தகைய உயர்ந்த பட்டங்களை அளிப்பதுண்டு. கவிஞர் அமுது அவர்கள் நீண்டகாலம் உயர்தர வகுப்புக்களில் ஒரு சிறந்த ஆசிரிய மணியாகப் பணியாற்றியுள்ளார். மேலும் சமுதாயததில் சிறந்த மனிதராக வும், சான்றோர்களில் ஒருவராகவும் மதிப்புப் பெற்றிருக்கின்றார். இறை பக்தியும், அன்பும், மனிதநேயமும் அன்னாரின் மனித பொக்கிஷங்கள். ஆசிரிய சங்கங்கள், அரசியல் களங்கள், கூட்டுறவு இயக்கங்கள், சமயப் பேரவைகள் என்பவற்றில் அவர் ஆற்றிய பங்கு போற்றத்தக்கது

புலவர் அமுது அவர்களின் எழுத்தாற்றலும், கவிதை ஊற்றும், பேச்சுத் திறமையும், உயர்ந்த பண்பும் அவரை உச்சத்தில் உயர்த்திக் காட்டின. இளமைக்காலத்திலிருந்தே அமுது அவர்கள் பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்தார் - பாதுகாவலன் - ஈழகேசரி - வீரகேசரி - சுதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டியம் - தினகரன் போன்ற எல்லாப் பத்திரிகைகளிலும் கவிதைகள், கட்டுரைகள், எழுதி வந்தார். அவர் எழுதிய பாடல்களில் ஒன்றைக் கவனிப்போம்.

" கல்லும் மண்ணும் இழுத்திழுத்து - நாங்கள்
கட்டிய கட்டடம் கொஞ்சமல்ல
அல்லும் பகலும் உழைத்துழைத்து - என்ன
ஆறுதல் கண்டனம் தேறுதற்கே"
என்று "கிழ எருது புலம்பல்"
என்ற தலைப்பில் வரும் கவிதையிது.

அமுதுவின் கவிதைகளை ஆராய்ந்தால் அவை பெரும்பாலும் மரபுக் கவிதைகளே - இவர் எழுதிய கவிதைகளைத் திரட்டி "அமுதுவின் கவிதைகள்" எனப்பெயரிட்டு வெளியிடப் பெற்றது. இவரின் கவிதைகளைப் படித்த 'வெரித்தாஸ்' வானொலி இயக்குநருமான கஸ்பார் அடிகளார் - நம்மிடையே பல கவிஞர் பெரு மக்கள் இருந்த போதிலும் - மரபுக் கவிதைகளில் கண்ணதாசனுக்குப் பின்பு 'அமுது' அவர்களே இடம் பெறுகின்றார், என்று பாராட்டினார். கண்ணதாசனின் "இயேசு காவியத்தையும்" அமுதுவின் 'மடுமாதா காவியத்தையும்' ஒப்பிட்டால் இருவரின் கருத்தொற்றுமை புலப்படும்.

அமுது எழுதிய முதல் நூல் - "நெஞ்சே நினை" என்பதாகும். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் வாழ்க்கை வரலாறுதான் இது. அமுதுவுக்குப் புகழைத் தேடிக் குவித்த இன்னொரு நூல் - "அன்பின் கங்கை, அன்னை திரேசா" என்பதாகும். இந்நூலைப் பாராட்டாதவர்களில்லை. இதுவரை ஒன்பது நூல்களை எழுதியுள்ளார். இவருக்கு "சொல்லின் செல்வர்", "கவிமாமணி", "செந்தமிழ் தென்றல்", "தமிழ் கங்கை", "புலவர் மாமணி", "மதுரகவி மன்னன்" என்ற பட்டங்களைக் கொடுத்துப் பாராட்டினர்.

இவ்வாறு பல பட்டங்களைப் பெற்ற புலவர் அமுது அவர்களுக்கு இப்போது பரிசுத்த பாப்பரசர் "செவாலியர்" பட்டத்தை வழங்கியுள்ளார். இப்பட்டமளிப்பு விழா கடந்த டிசம்பர் மாதம் 14ம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் ஞாயிறு பிற்பகல் இலண்டன் கிறீன் போட் மாதா மகா ஆலயத்தில் சௌத்வாக் ஆயர் ஹோவாட்றீப் அவர்கள் பாப்பரசரின் பதிலாளியாயிருந்து பட்டத்தையும் விருதையும் வழங்கினார்.

புலவர் மணி அமுது அவர்களின் மகன் பேராசிரியர் ஏ.ஜே.வி.சந்திரகாந்தன் அடிகளார். யாழ் பல்கலைக்கழகத்தில், கிறிஸ்தவ நாகரீகத்துறையின் தலைவராக பணியாற்றிய போது சுன்னாகத்தில் இயங்கும் "இலங்கைக் கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி" வழங்கும் டிப்ளோமா சான்றிதழ் - பல்கலைக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்டு, கிறிஸ்தவ நாகரீகத் துறையில் எங்கள் மாணவர் கள் தொடர்ந்து இளங்கலைப்பட்ட படிப்பைத் தொடரலாமென அனுமதி வழங்கச் செய்தார். இப்போது போராசிரியர் கனடாவில் ரொரற்டோ பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். புலவர் மணி அமுது அவர்களை நாம் உளமார வாழ்த்துகின்றோம்.

**அருட்தந்தை டி.ஆர். அம்பலவாணர்.**
**பாதுகாவலர் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி**

# அன்னை திரேசாவின் ஐந்து வரிகள்

மௌனத்தின் கனி இறைவேண்டல் (செபம்)
இறைவேண்டலின் கனி கடவுள் பற்று (பற்றுறுதி)
கடவுள் பற்றின் கனி அன்பு
அன்பின் கனி சேவை
சேவையின் கனி சமாதானம்

**(மௌனம் - செபம் - நம்பிக்கை - அன்பு - சேவை - சமாதானம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவிலே சிதைகின்ற படைப்பு

அன்பு என்னும் சொல்லுக்கு இலக்கணம் தேடுவது என்று சொன்னால் அது மிகவும் கடினமான ஒரு பணி. ஏனெனில் எம் முதாதையர் மத்தியில் "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்" என்ற முதுமொழியை நாம் கேட்டுள்ளோம். இயற்கையில் வளருகின்ற பறவைகள், விலங்குகள் அனைத்துமே அன்பை மையமாக கொண்டுள்ள ஐந்தறிவுள்ள விலங்குகள் ஆகும். ஆனால் இவை கூட நாம் ஈன்றெடுத்த இளசுகளை எவ்வளவு பரிவுள்ளத்துடன் பராமரிக்கின்றன. பசியைத் தீர்ப்பது மட்டுமல்ல அவற்றிற்குச் சூடு தேவைப்படும் பொழுது தம் உடலுடன் சேர்த்து அணைத்தும் ஆபத்து வருகின்ற பொழுது அபாயக்குரலெழுப்பியும் அவற்றைக் காக்கின்றன. இவை இந்த ஐந்தறிவு ஜீவிகளின் பண்பு.

ஆனால் இன்று நாம் வாழுகின்ற சமுதாயத்தில், ஒரு புறம் தாயின் அன்புக்கு நிகரான அன்பு இல்லையென்று வாதாடும் அதேவேளை - தம் சுயநலம் கருதும் தாய்மாரும் இருக்கத்தான் செய்கின்றனர். இதனால் தான் இன்று சிசுக் கொலை, கருவழிப்புக்கள் போன்ற அழிவுகள் ஏற்படுவதைக் காண்கின்றோம். இங்கு தாய்ப்பாசத்துக்கு என்ன நடந்தது என்று கேட்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இவற்றுக்கு எமது நாடுகளில் நிலவிவருகின்ற சமூக கலாசார பொருளாதார சீர் கேடுகளும் ஒரு காரணமாக அமைகின்றன. அது மாத்திரமன்று இன்று வேகமாக வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலகமும் உலகமயமாக்கலும் இதற்கு ஒரு காரணமாகும். இதனால் வேகமாக உருளுகின்ற உலக உருண்டையுடன் கூட சேர்ந்து இந்த தாய்ப்பாசமும் ஓடத் தொடங்கி விட்டது. பெற்ற பிள்ளையைக் கூட கவனிக்க முடியாத அளவுக்கு அவளின் பொருளாதார நிலமை கண்களை மூடி விடுகிறது. "கர்பத்தின் கனி கடவுள் தந்த ஆசீர்வாதம்" என்ற பதம் மாறி இன்று, கர்பத்தின் கனி வேதனையின் வித்து என்ற அளவிற்குத் தாய்மை எனும் சொல்லுக்கே அர்த்தம் தெரியாத ஒரு சமுதாயம் உருவாகிக் கொண்டு வருகிறது.

இதனால் தான் ஓர் இனச்சேர்க்கைத் திருமணங்கள், இன்று உலகநாடுகளிலும் மதங்களிடையேயும் வரவேற்கப்படுகின்றன. இவ்வாறான தீய கலாசாரங்களினால் தமக்கு எவ்வித பாதிப்பும் அதாவது பொருளாதார ரீதியாகவும் வாழ்வியற் ரீதியாகவும் ஏற்படப்போவதில்லை. பொருளாதார சிக்கலும் மிகவும் குறைவு. முடிந்த வரையில் தமது வாழ்க்கையில் இன்பத்தை காணுவதே அவர்களது ஒரே நோக்கமாகவுள்ளது. எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காக அவர்கள் எந்த வகையான முறைகளையும் கையாண்டு தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுகின்றனர். இதனால் இன்று வாழ்வியலானது கேள்விக் குறியாக மாறியுள்ளது.

இதனால் தான் என்னவோ, பவுல் அப்போஸ்தலன் தனது நிருபத்தில் "படைப்புக்களெல்லாம் ஒருங்கே கற்பவேதனைபடுகிறது" என்று கடவுளின் படைப்புகள் ஒரு தாயின் உருவில் வைத்து கடவுளின் ஓர் தாய்த்தன்மையைக் காட்ட விளைகிறார். இதற்கூடாக ஓர் தாயினுடைய கர்ப்ப வேதனை சித்தரிக்கப்படுகின்றது. இன்று எமது நாட்டின் சூழ்நிலையில் கூட கடவுள் ஓர் கருவுற்ற தாயாகத் தன் குழந்தையைப் பெற்றெடுக்கப் பெண்ணானவள் எத்தனை வேதனையை அனுபவிக்கிறாளோ - அதே போன்ற வேதனையை அனுபவிக்கிறார். ஆனால் நம் ஆண்டவர் எதிர் பார்ப்பற்ற வேதனையைச் சுமந்து கொண்டு இருக்கிறார். படைப்பு, மனித வாழ்வு பற்றி கடவுள் கொண்டிருக்கிற எதிர்பார்ப்பு என்னும் சிசுவானது கருவிலேயே அழிக்கப்படுகின்றது. இதுதான் இன்றைய சமுதாயத்தின் நிலை

இறைவனின் படைப்புகளாகிய நாம், எமது கருவிலிருந்து ஓர் நன்மை உருவாகவேண்டுமென்று எதிர்பார்க்கின்ற பொழுது, ஏன் ஒரு படைப்பாளியின் கருவை மட்டும் கருவிலே அழிக்கின்ற கருவிகளாக எம்மை பயன்படுத்திக் கொள்கின்றோம். இதனால் எமக்கு என்ன நன்மை அல்லது என்ன பயன் காத்திருக்கிறது. ஒரு தாய் தேற்றுவது போல் என் நேசர் தேற்றுவார் என்று நாம் எதிர்பார்க்கும் பொழுது ஏன் அந்த நேசரின் குழந்தைகளாக அவருக்கு அன்புகாட்டபின் நிற்கின்றோம். "இதோ உன்னை பேர் சொல்லி அழைத்தேன், என்று எம்மீது உரிமை பாராட்டுகின்ற எம் ஆண்டவரை, அவரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுகின்ற அவரின் பிள்ளைகளாக நாம் வாழ வேண்டியது எவ்வளவு நிச்சயமானது என்பதை நாம் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

ஜோன் அற்புதமணி,
3ம்வருட மாணவர்,
இலங்கை இறையியல் கல்லூரி,
பிலிமத்தலாவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்புக்களின் மத்தியில் உறுதி நிலை!

எங்கும் சமரசப் பேச்சுக்களோடு இருக்கும் இலங்கையின் அமைதி நிலையில், எப்போதும் ஒருவகைத் தளம்பல் நிலை இருந்து கொண்டு தான் இருக்கின்றது. ஒரு புறம் யுத்தத்தின் வடுக்கள் தீராத நிலையில் - மறுபடியும் ஒரு வகை இனக்கலவரம் தோன்றிவிடுமோ என்ற அச்சம் அரசியல் தலைவர்கள் முதல் பாமரமக்கள் வரை தோன்றி இருக்கின்றது. பலவாறான இனக்கலவரங்கள் இருந்தாலும், 83ம் ஆண்டு இனக்கலவரத்தை யாராலும் மறக்கமுடியாத ஒன்றாக இருக்கின்றது. இனங்களுக்கிடையே பலத்தை குறைத்து, மீண்டுமொரு கலவரத்தை உண்டுபண்ண தீய சக்திகள் முயன்று கொண்டு களத்தில் இறங்கியிருக்கின்றன. ஆனாலும் தீய சக்திகளின் முன்னால் இனங்கள் வலுவுற்ற நிலையிலேயே இருக்கின்றன. ஆதலினால் மதவெறியைத் தூண்டிவிட முடிவு செய்திருக்கின்றன. இந்த தீய சக்திகள். மதம் என்று வரும் போது ஒவ்வொரு மனிதனும் சுயநலவாதியாகத்தான் இருக்கின்றான். தன் இனத்திற்காக குரல் கொடுக்கும் ஒருவனை விட, தன் மதத்திற்காகக் குரல் கொடுக்கும் பலரைக் காணக் கூடியதாக உள்ளது. ஒரு மதக் கலவரத்தை இலங்கையிலே கொண்டு வரவும். ஒரு மத மக்களினுடைய அனுதாபத்தை பெறவும், அதன் மூலம் தங்களுடைய அரசியல் நிலைகளைப் பெருப்பித்துக் கொள்ளவும் முற்படுகிறார்கள். ஜனநாயக நாட்டில் மனித உரிமைகளைக் குறித்து சிந்திக்கும் போது, ஒருவரின் மத மாற்றத்திற்கு உரிமையுண்டு. மனிதனினதும் ஜனநாயக உரிமையாகும். மக்கள் தம் சுய விருப்பின் பேரில் மதம் மாறுகிறார்கள் என்றால் அதற்கான காரணத்தை முதலில் கண்டறிய வேண்டும். அதை விட சட்டத்தின் மூலம் தடுக்க முற்பட்டால் அது ஜனநாயகத்தை மீறும் செயலாகும்.

ஒரு தேசம் உறுதியாக நிற்பதும் சரிந்து விழுவதும் எவ்வளவு பலம் உள்ள அடித்தளத்தின் மீது அது கட்டப்பட்டுள்ளது என்பதை பொறுத்தே அமைகிறது. எனவே சமயத்தைப் பரப்புவதும், சமயத்தின் பால் மனமாற்றத்துடன் மக்களை ஈர்த்துக் கொள்வதும் ஒவ்வொரு சமயத்தினதும் எதிர்பார்ப்பாகும். ஆனாலும் சமயத்தைத் தழுவிக் கொள்ளும் மக்கள் மதத்தில் மாத்திரம் மாற்றத்தை காட்டுவது மட்டுமல்லாமல், தங்கள் மனங்களிலேயும் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் எப்போதுமே இறையவனோடு சங்கமமாகும் வாழ்வை வாழ முடியும். இவ்வாறான வாழ்வை வாழ முயற்சிக்கும் போது பல்வேறு துன்பங்கள் எமக்காக காததிருக்கும். இப்படியான துன்பங்களோடு மதமாற்றத் தடை சட்டமும் அமையலாம். ஆனாலும் இவற்றுக்கும் மத்தியில் உண்மையான சாட்சியான வாழ்வை வாழ்ந்து காட்டுவது கிறிஸ்தவ சாகியத்தின் மேலான கடமையாகும்.

**சகோ. ஏ. வெஸ்லி கமலகுமாரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் விழுப்பந் தரும்

நல்லொழுக்கம் செல்வத்தைப் போன்றது
முறையான இல்லறம் துறவறத்தைப் போன்றது
புறங் கூறல் கொலை செய்வதைப் போன்றது
தம்மை மதியாதோர் முன் செல்லல் மடிவு போன்றது.

கடந்த காலத் துன்பம் கற்றறிந்தார் முன் மறையும்
வலிய வரும் துன்பம் ஊக்கமுடையோர்க்குத் தோன்றாது
தீமை செய்வோர் முன் அறம் தோன்றாது
சினமுடையார் முன் நன்மை தோன்றாது.

கற்றவர் நன்நெறியில் நடந்திட வேண்டும்
கல்லாதோர் கற்றோர் முன் நின்று கற்றிட வேண்டும்
கற்றோர் கல்லாதோர்க்குக் கற்பித்தல் வேண்டும்.
கற்றோர் கலங்கினால் நன்நெறி மறையும்.

நினையாமை வேண்டும் மற்றோர் தீமைகளை
மறவாமை வேண்டும் அவர் செய்த நன்மைகளை
விட்டு விடல் வேண்டும் பழிவாங்கலை
வேரோடழிக்க வேண்டும் தீச் செயல்களை

அறிவு நூற்களைக் கற்றவன் அறியாமையிலிருந்து விலகுவான்
அறியாமையில் இருந்து விலகியவன் அறிவுடைமையைப் பெறுவான்
அறிவுடைமையைப் பெற்றவன் நன்நெறியில் நிற்பான்
நன்நெறியில் நிற்பவன் நல்லோரால் புகழப்படுவான்.

சகோ. என். ரீ. சுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளின் தாய் உள்ளம்.

பூக்கும் பூவெல்லாம் பூஜைக்கு மாத்திரம் அல்ல
கல்லறைக்கும் செல்வதுண்டு - அதேபோல்
பூமியில் பிறப்போர் எல்லாம்
பூரிப்பாய் வாழ்ந்துவிடுவதில்லை
அம்மா என்கின்ற அன்பின் வார்த்தையை
ஆசைக்கு கூட நான் கூறியதில்லை
ஆயிரம் சொந்தங்கள் இருந்தாலும்
அம்மா போல் வருமா? ஆ[illegible]
பத்துமாதம் பொறுமையாய் சுமந்தவள்.
பத்து நிமிடம் கூட கைகளில் சுமக்கவில்லை
பிஞ்சு எனது மஞ்சம்
ஒரு குப்பைத் தொட்டி
கருவறை உறவு கலைந்து சென்றாலும்
கருவிலேயே என்னை நேசித்த கருணை தெய்வம்
கரம் கொடுத்தது.........
அநாதை இல்லத்தில்
ஆண்டுகள் பல கழிந்த பின்
ஆயிரமாயிரம் எதிர்பார்ப்புகளுடன்
அழகிய பெண்ணாய்
அவனியை நோக்கினேன்
ஆபத்துக்கள் தோல்விகள்- சோர்வுகள் தொல்லைகள்
இவற்றிற்கு நான் மட்டும் விதி விலக்கா
ஆயிரம் பிரச்சினைகளுடன் வந்தாலும்
அம்மா மடி சாய்ந்தால் - அனைத்துமே மறைந்து விடும்
வேதமே என் தாய்மடி - தேவனே என் அன்புத்தாய்
சோர்வுகளில் பெலன் - தோல்விகளில் தைரியம்
ஆபத்தில் அடைக்கலம் - துன்பத்தில் இன்பம்
அழுகையில் ஆறுதல் - அன்பார்ந்த வார்த்தைகள்
அதிசயமான வழிநடத்தல் - குறைவற்ற களங்கமற்ற அன்பு
அம்மா இல்லாமலேயே - அனுதினமும் அனுபவிக்கிறேன்
இது பத்துமாத பந்தமல்ல - நித்திய நித்தியமாக தொடரும் பந்தம்
இவை கற்பனையல்ல - என்னைப் போன்ற
அநாதை உள்ளங்களின் உண்மைகள்.

***எரிக், ஜோயல் ஜெக்சன்***
***இலங்கை இறையியல் கல்லூரி,***
***பிலிமத்தலாவ***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை வணக்கம்

ஆண்டவரே,
வாழ்வதும் இறப்பதும்
என் கையில் இல்லை
உம்மை நேசிப்பதும்
உமக்கு ஊழியம் செய்வதும் தாம்
என் கடமை அன்றோ!
இதை நிறைவேற்றவே உம் அருள் வேண்டும் ஐயா!

வாழ்நாள் நீண்டு சென்றால்
மகிழ்ந்திடவே செய்வேன்
நீண்ட நாள் பணிந்து வாழலாமே!
குறுகியதாய் அமைந்தால்
அப்போதும் துயரடையேன்.
துயர வாழ்வை வேண்டுவோன்யானலன்.

இருள் கவியும் அறைக்குள்
இயேசு என்னை நடத்திட்டார் - ஆம்
அவர் நடந்த இருட்பாதையை விட
இருள் மிகுந்தது ஒன்று உண்டோ?
இறைவனின் அரசினுள் வரவிளைவோர்
நுழைதற்கு உரிய வாசல் இதுவேதான்.

இயேசுவே,
உம் அருள் முகத்தை நான் காணும்
அந்நாளில் அருகில் வாரும் ஐயா
மண்ணில் உம் பணி மதுரமானதாயின்
விண்ணில் உம் மகிமை எத்தகைத்தாம்
இனியதாய் இருந்திடும் எனக்கு!

அப்போது, என் முறையீடுகள் முடிவுறும்
துயர துன்ப நாட்கள் மறையும்
வெற்றி சிறந்து விளங்கிடும்
பக்தர் திரளோடு சேர்ந்து நான்
பரம கீதம் பாடிடுவேன் ஐயா!

மேலோக வாழ்வைப் பற்றி நான்
ஒரு சிறிதே அறிந்தோன் ஐயா
விசுவாசக் கண் பார்வையிலும்
தெளிவுடையேன் அல்லேன்,
ஆண்டவர் கிறிஸ்து, அனைத்தும் அறிவர் ஆதலின்
அது ஒன்றே போதும் - அவரோடிருப்பேன் நான்

**மாபெரும் பக்தர்,**
**ரீச்சாடு பாக்ஸ்டர்.**
**(கி.பி.1615 - 1691)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயும், தந்தையுமான இறைவன்

ஒரு குழந்தை பிறந்தவுடன் முதலில் தாயை இனம் காணுகின்றது. அக்குழந்தை பேசும் போது முதலில் "அம்மா" என்றே அழைக்கின்றது. ஆகவே ஒரு குழந்தையின் முழுவளர்ச்சியில் அக்குழந்தையின் உணர்வுகள் இரண்டறக் கலந்திருப்பது சொல்லில் அடங்காத ஒன்று எனவே இப்படியான சூழலிலே பெற்றோரும் தமது குழந்தைக்கு தம்மை வெளிப்படுத்த தவறுவதில்லை. அக்குழந்தை வளர்ந்த பின்பு தமது பெற்றோரின் பெயர் அடையாளம் போன்றவற்றை கவனமாக தெரிந்து தன் மனதிலே சேமித்து வைத்துக் கொள்கின்றது. இப்படியான ஒரு உறவை தான் தாயும் தந்தையுமான இறைவன் மனிதனோடு எவ்வாறு உறவு கொண்டுள்ளார் என்பதனை திருமறை விளம்புகின்றது. எமது தாயும் தந்தையுமான இறைவனை அடையாளம் கண்டு எமது மனங்களிலே அதனை நிறுத்திக் கொள்வது எமக்கு தேவையான தொன்றாகும். அடிமை நிலையிலிருந்த இஸ்ரவேல் ஜனங்களை மீட்கும் படியாக கடவுள் மோசேயை அழைத்த போது "ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நானே" என்றுரைப்பதைக் காணுகின்றோம் (யாத் 3:6) இதிலிருந்து நாம் அவர் யாரென்பதை அறிந்து கொள்கின்றோம். மேலும் யாவே என்னும் பெயர் மோசே வாயிலாக அருளப்படுகின்றது. யாவே என்பது மீட்பின் கடவுள் எனப் பொருள்பட்டது. யாவே என்னும் இப் பெயரைத் தவிர வேறு பல பெயர்களும் விலியத்தில் காணப்படுகின்றன. (அதி35:7, ஆதி16:13, நீதி 9:46, ஆதி 21: 33, ஆதி 33:19-20) ஆகவே ஒருவரின் பெயர் அவரின் முழுதன்மையை வெளிக்காட்டுவது போல நாமும் யாவேயின் தன்மையை புரிந்து கொள்ளலாம்.

குடும்பம் என்று கூறும் போது பெற்றோரைச் சார்ந்த பிள்ளைகளையும் இணைத்துக் கூறும் ஒரு கட்டமைப்பாகும். இறைவனின் பிள்ளைகள் அல்லது புதல்வர்கள் என்னும் இச்சொற்கள் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் பெரும் பாலும் இறைவனுடனான நல்லொழுக்கம் அல்லது ஆன்மீக உறவினையே குறிப்பிடுகின்றது. பழைய ஏற்பாட்டிலே இஸ்ராயேல் நம் மூத்த புதல்வன் (யாத் 4:22) நீங்கள் உங்கள் கடவுளுடைய பிள்ளைகளாக இருங்கள் (உபா14:1) எகிப்திலிருந்து நம் மகனை அழைத்தோம் (ஓசே 11:1) ஆகிய பகுதிகள் தாயும் தந்தையுமான இறைவனின் பிள்ளைகளுடனான உறவைக் காணலாம்.

இவைதவிர "தாய் தன் பிள்ளையைத் தேற்றுவது போல நான் உங்களைத் தேற்றுவேன் (ஏசா 66:13) கழுகு தன் கூட்டின் மேல் அசைந் தாடித்தன் குஞ்சுகள் மேல் படர்ந்து அணைப்பது போலும் தன் சிறகுகளை விரித்து அவற்றை தன் சிறகுகளில் சுமப்பது போல் ஆண்டவர் ஒருவரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை வழிநடத்தினார். (உபா 32:11,12) கோழி தன் குஞ்சுகளை தன் இறக்கைக்குள் கூட்டிச்சேர்ப்பது போல நானும் அரவணைத்து கொள்ள விரும்பினேன் (லூக் 14:34) போன்ற மேற்கூறப்பட்ட வாக்கியங்கள் தாயின் தன்மையைப் பற்றி கூறுகின்றன. சுருங்கக் கூறின் இறைவனின் நிலையான பாதுகாப்பினை சுட்டி நிற்பதைத் காணலாம் ஆகவே இங்கு தாயும் தந்தையுமான இறைவன் தனது பிள்ளைகள் மேல் கொண்டுள்ள பாதுகாப்பின் முக்கியத்தை அறியலாம்.

புதிய ஏற்பாட்டிலே வித்தியாசமான சில தன்மைகளைக் காணலாம். மகன் நிலை இயேசு கிறிஸ்துவுக்கு மட்டுமே உரியது. அவர் ஒரு இடையானராக நின்று மனிதனுக்கு இவ்வுரிமையைக் கொடுக்கலாம். (யோவா 1:11-12) வரையான பகுதியிலே அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்குரியவர்கள் அவரை ஏற்றுக் கொள்ள வில்லை. அவரிடம் நம்பிக்கைக் கொண்டு அவரைக் ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையைக் கொடுத்தார். இதே பொருளை இன்னொரு முறையில் ஒப்பிட்டு பார்க்கும் போது அடிமை நிலையினை மகனின் நிலையோடு ஒப்பிட்டு வேறு படுத்தி பார்க்கும் போது அடிமை நிலையினை மகனின் நிலையோடு ஒப்பிட்டு வேறு படுத்தி இயேசுவே மகனுக்குரிய கீழ்ப்படிதலின் தன்மையைப் பெற்றுக் கொண்டவர். ஆகவே தேவ ஆவியினால் தான் அப்பா தந்தாய் எனக் கூப்பிடுகின்ற உரிமையைப் பெற்றோம். நாம் இவ்வாறு கூப்பிடும் போது தேவ ஆவியானவரே நாம் கடவுளின் பிள்ளைகள் என்று சான்று பகர்கின்றார் (ரோமர் 8:15-16 கலா 3:23-27)

ஆகவே கிறிஸ்தவர்கள் ஏற்கனவே இறைவனின் பிள்ளைகளாக இருந்தாலும் இந்நிலையின் முழுமையான வெளிப்பாடு இன்னும் நிறைவேறவில்லை என்றே கூறலாம். இறைவனின் பிள்ளைகளாவதற்கு எம்மை ஒப்புக் கொடுக்கின்றோமா? தாயும் தந்தையுமான இறைவனின் குடும்பத்தில் அங்கத்துவம் வகிக்க இடம் கொடுக்கின்றோமா? எம்மைச் சூழவுள்ள பயங்கர சூழல்களிலிருந்து எம்மை விடுவித்துக் கொள்வோம். வெற்றி பெறும் ஒவ்வொருவனும் இறைவனின் மகன் ஆவான் என்ற வாக்களிப்பை உணர்ந்து கொள்வோம் (வெளி 21:7) தாயும் தந்தையுமான இறைவனின் பிள்ளைகளாகுவதற்கு கடவுளில் நம்பிக்கையும் பற்றும் கொள்வோம் எல்லா விசுவாசிகளும் இறைவனின் வீட்டை சேர்ந்தவர்கள் என்பதனை உணர்ந்து கொள்வோம். அப்போது தாயும் தந்தையுமான இறைவனின் புத்திர சுவீகாரத்தை இலகுவாகப் பெறலாம்.

**Bro.M.J**.லூக்
**C.T.S**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் பண்பை வளர்ப்பது நீதி நூல்களே!

உலகப் பொதுமறை எனப் பேற்றப்படும் திருக்குறள் ஆசிரியர் வள்ளுவனார் கூறுகிறார்:

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்கு தக"(391)

அதாவது, கற்கத் தகுந்த நூல்களைக் கசடறக் கற்க வேண்டும் அவ்வாறு கற்ற பின் கற்ற கல்விக்குத் தக்கவாறு நன்நெறியில் வாழ வேண்டும் என்பதே.

மாணவப் பருவம் மனித மாண்பை வளர்க்கும் பருவம். அது மனிதனின் பருவத்தில் முக்கியம் வாய்ந்தது. ஒருவன் எத்தகைய மனிதனாவான் என்பது மாணவப்பருவத்திலே நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே பூரணமான மனிதனாவதற்குச் சகல அறிவு சார்ந்த சேமிப்புக்களையும் மாணவப் பருவத்திலேயே தேடிக் கொள்வது அவசியம்.

வெறும் பாடசாலைக் கல்வியோ, மற்றும் உயர் கல்வியோ ஒருவனை அறிஞனாக்கமாட்டாது. பலவகையான நூல்களையும் வாசிப்பவனே பரந்த அறிவுடையவனாக வளர முடியும். வாசிக்க வாசிக்க ஒருவரது அறிவும் வளர்ச்சி பெறும். இன்றைய நவீன உலக வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கக் கூடிய வகையில் அறிவைப் பெருக்குவதற்காக மாணவர்களும், உயர் கல்வி கற்போரும், ஏனையோரும் வாசிப்புப் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

"அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டிக் கொளல்"(401)

அறிவு நிரப்புவதற்குக் காரணமான நூல்களைக் கற்காமல் கற்றவரிடம் சென்று பேசுதல், சூதாடும் அரங்கு இழைக்காமல் வட்டுக்காயை உருட்டி ஆடினாற் போன்றது.

மனிதனை உயர்த்துவது பணமன்று, பதவியன்று, குலமன்று, பருமனன்று, உயர்வன்று, அறிவு ஒன்றுதான். ஆகவே மனிதனை உயர்த்தும் "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்கிறார் திருவள்ளுவர். ஒருவர் வாசிக்கும் அளவுதான் அவனை உயர்த்து கின்றது. நல்ல நூல்களை கற்கும் போது மனத் தெளிவு உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு ஒரு மனிதனைப் பூரண மனிதனாக்குகின்றது. கண்டது கற்கப் பண்டிதனாவான் என்பதை நாம் நினைவில் வைத்திருத்தல் வேண்டும். கல்வி கற்கும் ஒருவன் சிறந்த நூல்களை வாசித்து தன்னைச் சமூதாயத்திற்குப் பயனுள்ளவனாக உருவாக்கிக் கொள்ளாவிடின் அவன் பிற்காலத்தில் கிணற்றுத் தவளையாக வாழ நேரிடும். "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்பதை மனதில் பதித்து செயற்படுதல் வேண்டும்.

" நீரளவேயாகுமாம் நீராம்பல் தான் கற்ற
நூலளவேயாகும் நுண்ணறிவு"

என்பது நீதி வாக்கியம். கல்வி கற்கும் ஒவ்வொருவரும் ஒளிமயமான வாழ்க்கையின் திறவுகோலாகட்டும். உலகில் மக்கள் செய்யும் தவறு, சிறந்த நூல்களைக் கல்லாததேயாகும். ஆதலால் எல்லோரும் நீதி நூல்களை நன்கு கற்றறிதல் வேண்டும்.

அறிவு சார்ந்த பெருமக்கள் உலகின் நன்மைக்காகத் தாமறிந்தவற்றை எழுதுவதுதான் சாலச் சிறந்தது. உடல் வளர்ச்சிக்கு உணவு தேவை போல் அறிவு வளர்ச்சிக்கு நூல்கள் பயன்படுகின்றன. ஒரு நல்ல புத்தகம் ஒரு நல்ல மாணவனுக்கு நல்ல சொத்தாகும். அது காலமென்னும் மாபெரும் கடலிற் கலங்கரை விளக்காகத்திகழுளளம். தலை முறை தலைமுறையாக வாழ்நத அறிஞர்களின் தொடர்பை உருவாக்கும் ஓர் நல்ல நண்பனாகவும், உறவினனாகவும் உறவாடுவது நூல் ஆகும்.

மாணவர் மனதில் கல்வி நெறியை மற்றும் அன்பு நெறியை வளர்க்க அவசியம் வேண்டியது நூல்கள். மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து பரந்த மனப் பண்புடையவராய் வாழ்வதற்கு மாணவர்களுக்கு கை கொடுக்கும் மாண்புடையன புத்தகங்களே. நூல்களைக் கற்று நாமும் அறிஞர்கள் ஆவோம்.

உள்ளத்தூய்மை உள்ளவனே நன்னெறியை நாடுகின்ற உணர்ச்சிகளுக்கு உருக்கொடுக்க முடியும்.

யோ. கரிஸ்ரன் றெஜினோல்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி! பசி!

பசியென்னும் நெருப்பே பரந்த இவ்வுலகைப்
பாழ்நரகாக்குதடா - அந்தப்
பாழும் நெருப்பை அணைக்கும்
பணியே பாரின் தேவையடா.

உறவைத் தின்று உயிரை வளர்க்கும்
உணர்ச்சி பெருகுதடா - பெரும்
வறுமையதற்கு வழியாயிருந்து
வஞ்சம் புரியுதடா

பொருளுள்ளோர்தம் உள்ளந்தனிலே
பூட்டு விழுந்ததடா - அதனுள்
அருளும் கருணை அடங்கிக்
கொண்டு தத்தளிக்குதடா

செல்வம் சிலரிடம் மலையாய்க்
குவிந்து செருக்கை வளர்க்குதடா - அதனால்
பள்ளம் விழுந்த பலரின் வாழ்வு
பசியில் வதங்குதடா

பசியில்லாத வயிற்றை இறைவன்
படைத்து வைத்தானா? - அன்றேல்
பணமில்லாது சுகமாய் வாழும்
வழியை வைத்தானா?

நல்வழி - நேரானது, செம்மையானது நீதியைக் கடைப்பிடிப்பதிலும் உண்மை வழுவாது வாழ்வதிலும் அமைதியைத் தேடுதலிலும் நன்நெறி அடங்கும்.

தீயோரின் வழி - கோணலாவது, மதியீனர்களையும், பாவிகளையும், அக்கிரமங்களையும், அழிவுக்கும், சாவுக்கும் இட்டுச் செல்லும்.

**சகோ. வி. எஸ். யூட் எழிலமிழ்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



S.ஜோன் புவியரசன்
மாணவர் மன்றத்தலைவர்
இறையியல் மன்றச் செயலர்



S.றிச்சேட் சதீஸ்குமார்
மாணவர் மன்றச்செயலர் ஆங்கில
மன்றச் செயலர்



M.நேசன் கெனடி
மெய்யியல் மன்றச்செயலர்



S.யூட் எழிலமிழ்தன்
முத்தமிழ் மன்றச் செயலர்



M.லூக்ஜோன்



N.தேவசுதன் சிவகுமார்
அருட்பணிமன்ற
செயலர்



A.வெஸ்லி கலைக்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுமுக வகுப்பு மாணவர்கள்



T.ஞானசுதன்



Y.கலிஸ்ரன் றெஜினோல்ட்



V.புனிதராஜா

## இலங்கை இறையியல் கல்லூரி மாணவர்கள்

**(மூன்று மாதப் படிப்பிற்காக வந்தவர்கள்)**



ஜோன் அற்புதமணி



ஆசிரி பெரேரா



A.அன்புராஜா



E.ஜோயல் ஜக்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தி மடல்

- மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் பழைய மாணவரும், தற்போது காரைநகர் தென்னிந்திய திருச்சபையின் ஊழியனுமாகிய வண.பி. தேவதாஸ் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக தெரிவு செய்யப்பட்டுள்ளார், என்பதனை கேள்விப்பட்ட நாம் சந்தோசமடைகின்றோம். இவரது பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

- 06.01.2004 அன்று இலங்கை இறையியல் கல்லூரி பிலிமத்தலாவையில் இருந்து மூன்று மாத இறையியல் படிப்புக்காக எமது கல்லூரிக்கு சகோ. ஆ. யோ. அன்புராஜா, ஜோன் அற்புதமணி, ஈஜோய் ஜக்சன், லீ.ஆசிரி பெரேரா ஆகிய நான்கு மாணவர்கள் வருகை தந்துள்ளார்கள்

- திரு. D.S அம்பலவாணரின் நன்கொடை எமது கல்லூரிக்கு திரு.D.S அம்பலவாணர் Guitar Table Tennis என்பவற்றை நன்கொடையாகத் தந்துள்ளார். அவரது முயற்சியைப் பாராட்டுகின்றோம். மேலும் எமது நூலகத்திற்கு பெரும் தொகையான நூல்களையும் பெற்றுத் தரவுள்ளார். இவருக்கு எமது நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. C. M Press. Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org